# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 9 சனிக்கிழமை (25-08-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:272


# ஸ்திரமான அரசு ஆட்சிக்கு வரும் வரை சமாதானப் பேச்சுக்கு வாய்ப்பு இல்லை!

## புலிகள் தரப்பில் தெரிவிப்பு

லண்டன்,ஓகஸ்ட்25

**கொழும்பில் ஸ்திரமான அரசு ஒன்று ஆட்சிக்கு வரும்வரை, இலங்கை அரசுத்தரப்புடன் சமாதானப் பேச்சு ஒன்று குறித்து ஆராய்வதற்கே வாய்ப்பில்லை.**

**இவ்வாறு லண்டனில் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய வட்டாரங்கள் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தன.**

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் அரசு - புலிகள் சமாதானப் பேச்சுக்கு வாய்ப்பு ஏதும் உண்டா என்று கேட்கப்பட்டபோது அந்த வட்டாரங்கள் தெரிவித்ததாவது:-

கொழும்பில் ஓர் அரசு ஆட்சியில் இருப்பதான நிலையே இப்போது இல்லை. அங்கு அரசியல் குழப்பம். ஸ்திரமான அரசு ஒன்று அங்கு ஆட்சிக்கு வரும்வரை யாருடனும் நாம் பேசுவது பயனற்றது. எனவே அங்கு நிலையான - ஸ்திரமான - அரசு ஒன்று ஆட்சிக்கு வரும் வரை நாம் பேச்சுக் குறித்து கவனிப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய நல்லிணக்க அரசு அமைப்பது குறித்த
# அரச தரப்பு - ஐ.தே.க. பேச்சுக்கள் இன்று முதல் 3 தினங்கள் நடக்கும்

கொழும்பு,ஓக.25

தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை அமைப்பது குறித்து பிரதமர் விடுத்த அழைப்புத் தொடர்பாக அரச தரப்புக் குழுவும் ஐ.தே.கட்சிக் குழுவும் இன்று பேச்சுக்களை ஆரம்பிக்கவிருக்கின்றன. அவை மூன்று தினங்கள் தொடரும்.

அந்தப் பேச்சுக்களில் ஏற்படும் முன்னேற்றத்தைப் பொறுத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் பின்னர் சந்தித்துக் கலந்துரையாடலாம் என்று அரசுத் தரப்பு அறிவித்துள்ளது.

பேச்சுக்களை இழுத்தடித்துக் கொண்டுபோக தமது கட்சி விரும்பவில்லை என்றும் -

குறிப்பிட்ட கால எல்லைக்குள் பேச்சுக்களை நடத்தி முடிக்க வேண்டும் என்றும் -

ரணில் பிரதமருக்குக் கோரிக்கை விடுத்திருந்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியின் நிபந்தனைகளை ஏற்கமுடியாது
# 'தகுதிகாண்' அரசு அமைக்கும் யோசனையை நிராகரித்துவிட்டார் ஜனாதிபதி சந்திரிகா!

கொழும்பு,ஓக.25

தங்களது ஆதரவுடன், தங்களது சில நிபந்தனைகளுக்கு அமைய 'தகுதிகாண்' அரசு ஒன்றை அமைக்கலாம் என்று ஜே.வி.பி. முன்வைத்த யோசனைகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிராகரித்துவிட்டார்.

ஜே.வி.பியின் நிபந்தனைகளை ஏற்பது சாத்தியமற்றது என்று தெரிவித்து ஜனாதிபதி குமாரதுங்க நேற்று ஜே.வி.பிக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்ததாக இணையத்தளச் செய்திகள் தெரிவித்தன.

நாடாளுமன்றத்தை முன்கூட்டி நேரத்துடன் கூட்டும்படி ஜே.வி.பி. முன்வைத்த கோரிக்கையையும் ஜனாதிபதி நிராகரித்துள்ளார்.

எனினும் ஐந்து முக்கிய விடயங்களைக் கையாள சுதந்திர ஆணைக் குழுக்களை ஸ்தாபித்தல், விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தாதிருத்தல் போன்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அலரிமாளிகை தேநீர் விருந்தை பகிஷ்கரித்த 4 அமைச்சர்கள்!

பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரிமாளிகையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எம்.பிக்கள் மற்றும் முக்கியஸ்தர்களுக்கு நேற்று நடத்தப்பட்ட மாலைத் தேநீர் உபசாரத்தை நான்கு முக்கிய அமைச்சர்கள் பகிஷ்கரித்தனர்.

அண்மைக்காலத்தில் ஜனாதிபதியுடன் முரண்டுபிடித்துக்கொண்டிருக்கும் ஜீ.எல்.பீரிஸ், எஸ்.பீ.திஸநாயக்கா, ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, மஹிந்த விஜேசேகரா ஆகிய அமைச்சர்களே நேற்றைய நிகழ்ச்சியைப் பகிஷ்கரித்தனர் என்று இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (உ)

## புறக்கோட்டையில் இரு கிளைமோர் நேற்று மீட்பு

கொழும்பு,ஓக.25

கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் நேற்றுக் காலை இரண்டு கிளைமோர்க் குண்டுகள் மற்றும் வெடிபொருள்களை பொலீஸார் கைப்பற்றியுள்ளதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

பதுளையில் இருந்து கொழும்புக்கு வந்த பஸ்ஸை புறக்கோட்டை சோதனைச் சாவடியில் வழிமறித்து சோதனையிட்டபோதே இந்த வெடிபொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக இரண்டு பேர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டது. (க-4)

## ஜனார்த்தனம் நேற்று கைதாகி விசாரணையின் பின் விடுவிப்பு

கொழும்பு,ஓக.25

கொழும்பு வந்துள்ள உலகத் தமிழர் பேரவைத் தலைவர் கலாநிதி இரா.ஜனார்த்தனம் நேற்றுக் காலை பொலீஸாரால் கைது செய்யப்பட்டு இரு மணிநேரம் விசாரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார்.

கோட்டையில் உள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக மற்றொருவருடன் நின்று அவர் படம் பிடித்துக் கொண்டிருந்ததாகவும் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கொக்குத்தொடுவாய் தாக்குதலில் 9 படையினரைக் காணவில்லையாம்

## செஞ்சிலுவை உதவியை நாடியுள்ளது அரசு

கொழும்பு,ஓக.25

கொக்குத்தொடுவாய் முகாம் மீது நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து படையினரில் ஒன்பது பேர் காணாமற் போயுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

இந்தத் தகவலை அடுத்து அந்தப் பகுதியில் படையினர் தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர் என்றும் -

எனினும் அந்த ஒன்பது படையினரையும் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் - தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

நேற்றுக் காலைவரை அவர்கள் முகாமுக்குத் திரும்பாததை அடுத்து அவர்களைக் கண்டுபிடிக்க செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவியை படையினர் நாடியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை -

இந்தத் தாக்குதலில் கைப்பற்றிய 7 படையினரின் சடலங்களை எமது அமைப்பிடம் இன்று கையளிக்க ஏற்பாடு செய்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர் என்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பேச்சாளர் ஹர்ஷா குணவர்த்தன தெரிவித்தார். (க-3-4)

## வவுனியாவில் சுற்றிவளைப்பு

வவுனியா,ஓக.25

வவுனியா மாவட்டத்தில் ஈச்சங்குளம், தரணிக்குளம் ஆகிய பகுதிகள் நேற்றுக்காலை சுற்றிவளைக்கப்பட்டு அங்கு தேடுதல் இடம்பெற்றது.

அந்தப் பிரதேச மக்களை ஈச்சங்குளத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கூடுமாறு படையினர் அறிவுறுத்தியதாகவும் -

அவர்கள் பிற்பகல் 2 மணிவரை கடும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-3)

## ஆஸ்திரேலிய பிரதித் தூதருடன் ஜே.வி.பி. பேச்சு

கொழும்பு,ஓக.25

இன்றைய அரசியல் நிலைமை குறித்து கொழும்பில் உள்ள ஆஸ்திரேலிய பிரதித் தூதர் கதி க்கிளக்ம ஜே.வி.பி. அமைப்பின் தூதுக் குழுவுடன் நேற்றுக் கலந்துரையாடினார்.

ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

பிரிட்டிஷ் தூதரக ராஜதந்திரிகளையும் ஜே.வி.பி. பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடினர். (க-4)

## சபாநாயகர் நாடு திரும்பினார்

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு அமெரிக்காவுக்குச் சென்றிருந்த சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க நேற்று அதிகாலை நாடு திரும்பினார்.

இதேவேளை, சபாநாயகரை இன்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்து பேசவுள்ளதாக ஐதேக வட்டாரங்கள் தெரிவித்தன. (க-4)

## விமானத்தில் வினாத்தாள்கள்

குருநாகல்,ஓக.25

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குரிய மிகுதி வினாத்தாள்கள் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு நேற்று விமானம் மூலம் எடுத்துவரப்பட்டன. (க-51)

## களப்பலியான 6 புலிகள்

வவுனியா,ஓக.25

கொக்குத்தொடுவாய் மற்றும் ஜானகபுர படைத்தளங்கள் மீது நேற்றுமுன்தினம் தாங்கள் மேற்கொண்ட தாக்குதலில் தமது தரப்பில் உயிரிழந்த அறுவரின் விவரங்களை விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்துள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

★ மேஜர் நாயகன்(பேரம்பலம் யோகேஸ்வரன் - யாழ்ப்பாணம்).

★ மேஜர் பாண்டிமுத்து (பாலசுந்தரம் பிரதீபன் யாழ்ப்பாணம்).

★ 2ஆம் லெப்டினண்ட் இளங்கீரன் (முருகன் நாகரூபன் - மன்னார்).

★ 2ஆம் லெப்டினண்ட் மாதவன் (செல்வராசா நந்தகுமார் - கிளிநொச்சி).

★ தேசிய துணைப்படை வீரரான லெப்டினண்ட் காந்தரூபன் (சபாரத்தினம் காந்தரூபன் - முள்ளியவளை).

★ சுதாகரன் (வேலாயுதம் சுதாகரன் முள்ளியவளை). (க-3)

## மீனவர் சடலம் படையினரால் மீட்பு

திருகோணமலையில் கடந்த புதன்கிழமை வீட்டில் இருந்து அழைத்துச் செல்லப்பட்ட மீனவரான சித்திரவேல் தேவேந்திரன் (வயது 28) என்பவர் பின்னர் படையினரால் சடலமாக மீட்கப்பட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

பிரஸ்தாப நபர் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் முன்னாள் உறுப்பினர் என்றும் தகவல் நிலையம் தெரிவித்தது.

## களுத்துறையில் 8 தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதம்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள் எண்மர் நேற்று உண்ணாவிரதம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

பத்திரிகை வாசித்தல், விளையாட்டு போன்ற செயற்பாடுகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டதை ஆட்சேபித்தே இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக உண்ணாவிரதிகள் தெரிவித்திருக்கின்றனர். (க-4)

# பொன்விழா

## திருமிகு நா.வன்னியசிங்கம்

B.Sc. Dip.IN. Ed.

*அதிபர் - வைத்தீஸ்வராக் கல்லூரி,*
*பழைய மாணவன் - கொக்குவில் இந்துக் கல்லூரி,*
*றோட்டறியன்.*



தலைவர் :-சுடர் இ.மகேந்திரன்
காலம் :-இன்று (25-08-2001) சனிக்கிழமை
நேரம் :-பிற்பகல் 2.00 மணி
இடம் :-நாவலர் கலாசார மண்டபம்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

என்.கே.சண்முகலிங்கம் *தலைவர்* — பொன்விழாச் சபை — கி.கிருபானந்தா *செயலாளர்*

கல்வியில் கரையிலாக் கடலில் கணக்கியல் நாயகனாய்
மக்கள் சேவைக்கு மகேசனாய் - இன்று
பொன்விழாவினைக் கண்டிடும் இத்தகைய
உங்கள் வாழ்வும் சேவையும்
மேலும் வளர வாழ்த்துகின்றோம்.

இன்ரறக்ட் கழகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## அதிபரின் வாழ்த்து

திரு.நா.வன்னியசிங்கம் கொக்குவில் இந்துக்கல்லூரியில் நல் மாணாக்கராகக் கல்விபயின்று, வித்தியோதயாப் பல்கலைக்கழகத்திலே பட்டம்பெற்று, கணக்கியல் கற்பதிலே நல் ஆசானாகவும் விளங்கியதன் பயனாக, யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் இன்று மதிப்பார்ந்த அதிபராகவும் திகழ்கின்றார். இவர் கல்விச் சமூகத்துடன் இனிமையாகவும், அமைதியாகவும் பழகுவதோடு அடக்கமும் சிறந்த நிர்வாகத்திறனும் உடைய ஒரு நல்ல அதிபராகவும் விளங்குகின்றார். இன்றைய இன்நன்னாளிலே திரு.திருமதி வன்னியசிங்கம் தம்பதிகள் மழலைச் செல்வங்களாலும், மகிழ்ச்சியாலும் நிறைந்த நல்வாழ்க்கைப் பேற்றினை இறைவன் அவர்களுக்கு வழங்க வேண்டுமெனப் பிரார்த்தித்து வாழ்த்தி நிற்கின்றேன்.

பொ.கமலநாதன்,
அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி.

## பழைய மாணவர் சங்கத்தின் வாழ்த்து

எமது கொக்குவில் இந்துக் கல்லூரியின் தவப்புதல்வர்கள் பல்வேறு துறைகளில் தலைசிறந்து நிற்பது கண்டு நாம் பெருமைப்படுகின்றோம். எமது கல்லூரி பாரம்பரியத்தில் நிலைத்தவரான வன்னியசிங்கம் அவர்கள் கல்வித்துறையிலே தனக்கென ஓர் இடத்தினைப் பெற்றுள்ளார். சிறந்த றோட்டறியன் என்பதிலும் நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம். எமது கல்லூரியின் மீது மிகுந்த பற்றும் கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறையும் கொண்ட வன்னியசிங்கம் அவர்களை கல்லூரிச் சமூகத்தின் சார்பில் வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம். எமது இன்றைய கல்லூரி மாணவர்களுக்கு இவர் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கின்றார். இவர் தனது அயராத உழைப்பினாலும் தளராத மனவுறுதியினாலும் கண்ணியம், கட்டுப்பாடு என்ற நல்லொழுக்கங்களாலும் வாழ்வில் முன்னேறி வருகின்றார்.

'வன்னியசிங்கம் குடும்பம் வாழ்க பல்லாண்டு'

இ.நடராசா — தலைவர்
இ.செல்வநாதன் — செயலாளர்.

## அபிவிருத்திச் சபையின் வாழ்த்து

எமது கல்லூரியின் பழைய மாணவன் வன்னியசிங்கம் அவர்களின் பொன்விழா சிறப்புற வாழ்த்துகிறோம். எமது கல்லூரியில் மிகுந்த பற்றுடையவர் வன்னியசிங்கம் வைத்தீஸ்வராக் கல்லூரியின் சிறந்த அதிபர்; எல்லாவற்றிற்கும் மேலாக "நல்ல மனிதன்"

சி.ஸ்ரீ கணேசன்
செயலாளர், பாடசாலை அபிவிருத்திச்சங்கம்.

*பொன்விழா சிறப்புற வாழ்த்துவோர்:*

| | |
|---|---|
| ஜி.எஸ். லிங்கநாதன் அன் கோ<br>இல.13, 14, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். | ஸ்ரீ அமலா ஜுவலர்ஸ்<br>74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |
| பெஷன் ஹவுஸ்<br>65, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். | கொனிகா கலர் லாப்<br>14, ஸ்ரீ வெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம். |
| ஹரிஹரன் பிறின்டேர்ஸ்<br>424A, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். | ஸ்ரீ டிஜிற்றல் கலர் லாப்<br>14, ஜம்பட்டா வீதி, கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13 |

*கொக்குவில் இந்து சமூகம் வாழ்த்துகின்றது.*

(C/17994)

### யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் வாழ்த்து

இன்று பொன்விழாக் காணும்
எங்கள் கழக உபதலைவர்



**றோட்டறியன் நா.வன்னியசிங்கம்**

அவர்களின் பணி மேலும் தொடர
வாழ்த்துகின்றோம்.
- *யாழ்ப்பாணம் றோட்டறிக்கழகம்.*

(C/17991)

### ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு 23 - 07 - 1930



இறப்பு 04 - 09 - 2000

**திருமதி சந்திரசேகரம் கௌரியம்மா**

திதி:ஸப்தமி 25-08-2001

*பாசத்துடன் உன்னுடன் வாழ்ந்த வாழ்க்கை*
*பஞ்சாகப் பறந்துவிட்டதுவே!*
*பாசமிகு உன் அன்பு நெஞ்சங்கள்*
*ஓராண்டு போனாலும் உன்னைத் தேடுகின்றனவே!*
*கௌரி அக்கா என்னும் சொல்லைக் கேட்டால்*
*உன் பாசமுகம் புன்னகைக்கும் எம் இதயத்திலே!*

எம் வாழ்நாளில் உன் நினைவுடனே
வாழ்த்துடிக்கும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

*'லெமோன் கவுஸ்'*
*ஓடக்கரை,*
*பருத்தித்துறை.*
(91558)

## 'முதல் மரியாதை' படக்காட்சி

யாழ்ப்பாணம்,ஓக.25

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும், திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படத் தொடரில் பாரதிராஜாவின் "முதல்மரியாதை" எனும் திரைப்படம் இன்று சனிக்கிழமை காலை ஒரு மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் கலந்துகொண்டு பயன்பெறலாம் என்று புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (க)

## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஓக.25

மானிப்பாய் புனித அன்னம்மாள் பந்தி மற்றும் புனித வின்சென் டி போல் சபை ஆகியவற்றின் அனுசரணையுடன் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச பொது மருத்துவ முகாம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு மானிப்பாய் சென்ற்.ஆன்ஸ் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

வசதியற்ற முதியோருக்கும், இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்ற மக்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படவுள்ள இந்த முகாமில் சலரோக பரிசோதனையும் மேற்கொள்ளப்படஉள்ளது.

வைத்திய கலாநிதிகளான ஜே. மகாதேவா, கே.இரத்தினசிங்கம் ஆகியோர் பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர். (ம-10)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஓக.25

உரும்பிராய் கிழக்கு செல்லப்பா சனசமூக நிலையத்தின் ஆதரவில் உரும்பிராய் லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவமுகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த முகாமில் கண், இரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும் பொது நோய்ப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ம-10)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக.25

'பாதுகாவலன்' பத்திரிகையின் ஆசிரியரான அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை எழுதிய 'பத்திரிகையியலுக்கு ஓர் அறிமுகம்' என்னும் நூலின் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு 'பாதுகாவலன்' அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. (க-3)

☆ ☆ ☆

தென்மராட்சி,ஓக.25

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான கும்பாபிஷேக மலர் வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணிக்கு தேவஸ்தான புதிய வசந்த மண்டபத்தில் அறங்காவல் சபைத் தலைவர் இ.அன்னலிங்கம் தலைமையில் நடைபெறும்.

நூல் அறிமுகவுரையை யாழ்.பல்கலைக்கழக கல்வியற்றுறைத் தலைவர் பேராசிரியர் சபா.ஜெயராசாவும், நூல் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக் கழக முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும் பதிப்பாசிரியர் உரையை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் இ.நாகேந்திரராஜாவும் நிகழ்த்துவர்.

நூலின் முதற்பிரதியை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி.சந்திரசேகரம்பிள்ளை, இலங்கை மின்சார சபை யாழ்.பிராந்திய மின் பொறியியலாளர் வே.வல்லிபுரம் ஆகியோர் பெற்றுக்கொள்வர்.

(ம-117-173)

## 'சந்நிதிச் செல்வம்' நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம்,ஓக.25

வல்வை ந. அனந்தராஜின் 'சந்நிதிச் செல்வம்' நூல் அறிமுகவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு, தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும்.

வ.இ. நடனசிகாமணி தலைமையில் நடைபெறும் 'சந்நிதிச் செல்வம்' நூல் அறிமுக விழாவில் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அதிபர் ந.அரியரத்தினம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

மதிப்புரையையும், அறிமுக உரையையும் யாழ் பல்கலைக் கழக இந்து நாகரிகத் துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும் பதிலுரையை யாழ்.பல்கலைக்கழக மாணவி செல்வி அனந்தராஜ் தேவகியும் நிகழ்த்துவர். (க)

பிரான்ஸ் சஞ்சிகை அதிர்ச்சித் தகவல்

# இமாலயப் பிரதேசத்தில் பூமியதிர்ச்சி ஏற்படலாம்

## 50 மில்லியன் மக்களுக்கு உயிராபத்து

புதுடில்லி,ஓக.25

இமாலயப் பிரதேசத்தில் பூமியதிர்ச்சி ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் -

இதனால் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் அதனை அண்மித்த நாடுகளில் வாழும் 50 மில்லியன் மக்கள் உயிராபத்தை எதிர்நோக்கியுள்ளனர் என்றும் -

'ஜேனல் பிரான்ஸ்' என்ற சஞ்சிகை அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது.

மேற்படி சஞ்சிகையில் விஞ்ஞானிகளான றொயபெலாம், பீற்றர் மவுன்லான் ஆகியோர் தாம் மேற்கொண்ட ஆராய்ச்சிகள் தொடர்பான கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அந்தக் கட்டுரையிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

"கடந்த [illegible] வருடமாக இமாலயப் பகுதிகளை அண்டிய பிரதேசங்களில் நாம் ஆய்வுகளை நடத்தியிருந்தோம்.

"இந்த ஆய்வுகளில் பூமியதிர்ச்சிக்கான அறிகுறிகளே அதிகமாக இருப்பதாகத் தென்பட்டன.

எனவே இமாலயப் பகுதிகளை அண்டிய மக்கள் எந்நேரமும் பெரும் ஆபத்தைச் சந்திக்க நேரிடும்."

- என்று அந்த விஞ்ஞானிகள் தமது கட்டுரையில் தெரிவித்துள்ளனர். (ம-7-10)

# எட்டு மாதங்களில் சீனாவில் 3ஆயிரம் பேருக்கு எய்ட்ஸ்

பெய்ஜிங்,ஓக.25

சீனாவில் கடந்த 8 மாதங்களில் மட்டும் மூவாயிரத்து 541 பேர் எய்ட்ஸ் நோய்க்கு இலக்காகியுள்ளனர்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றில் இருந்து இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

சீனாவில் இதுவரை 6லட்சம் பேர் எய்ட்ஸ் நோயாளிகளாக இனம் காணப்பட்டுள்ளனர். இவர்களை விட லட்சக் கணக்கானோர் எச்.ஐ.வி. கிருமித்தொற்றுதலுக்கு இலக்காகியுள்ளனர்.

எய்ட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது குறித்து சீன அரசு கவலை தெரிவித்துள்ளது.


எய்ட்ஸ் நோய் பரவுவதை தடுக்க சீன அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் இல்லையேல் 2010ஆம் ஆண்டு சீனாவில் எய்ட்ஸ் நோய்க்கு இலக்காவோரின் எண்ணிக்கை 10 மில்லியனைத் தாண்டிவிடும் என ஐ.நா. எச்சரித்துள்ளது. (ம-7-10)


# இதயபூர்வமான நன்றிகள்

### தனுவோடைப்பதி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தானம் சித்தன்கேணி

தனுவோடைப்பதி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வர லிங்கப் பெருமானை ஸ்தாபித்து சிவபூசை ஆற்றிய சித்தர்கள், சிவன்கோயிலின் மூன்றாம் திருவீதியில் ஞானவைரவர் சந்நிதானத்தில் எவரும் விஷக்கடியால் பாதிப்புறாமல் இருக்க நாகக்கல் ஸ்தாபித்து, சித்தன்கேணி எனப் பெயர்வரக் காரணமாக அமைந்த வரலாற்றுப் புகழ்மிக்க திருக்கேணியை அமைத்தார்கள்.

இப்புகழ்மிக்க திருக்கேணியை அழகுறப் புனரமைக்கும்பொருட்டு அதற்கான ஆரம்பப் பணியை சம்பிரதாயபூர்வமாக இன்று (25.08.2001) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு,



வலி.மேற்கு
பிரதேச சபைத் தலைவரும்,
இந்து கலாசார அமைச்சின்
வடபிராந்தியப் பொறுப்பாளருமாகிய
**திரு. ந.திரிலோகநாதன்**
அவர்கள்
ஆரம்பித்து வைக்கின்றார்.

**அவர்களுக்கு சித்தன்கேணி மக்கள் சார்பில் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.**

*சித்தன்கேணி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வர தேவஸ்தான ஆஸ்தான குருவும், பரிபாலனசபையினரும்.*

(91457)



# 36ஆம் நாள் நினைவஞ்சலி



நடிப்புலகில் சக்கை போடு போட்டு
நடிப்புக்கே இலக்கணம் வகுத்து
திரையுலகின் முடிசூடா மன்னனாக விளங்கியவர்
**சரித்திர நாயகன் நடிகர்திலகம் சிவாஜி!**

அவரது மறைவு அவரது குடும்பத்துக்கு மட்டுமல்ல
உலகத் தமிழ்த் திரையுலக ரசிகர்களுக்கும் பேரிழப்பாகும்!
அன்னாரது ஆத்மா சாந்தியடைய சபரிமலை வெங்கடேசப் பெருமாளை வேண்டுகிறோம்.

*- கொற்றாவத்தை, நவிண்டில் சிவாஜி ரசிகர்கள்.*

(91553)


## உலக அரங்கில்

### பெர்னாண்டஸை மீண்டும் அமைச்சராக்க முயற்சி?

இராணுவ ஆயுத வியாபாரத்தில் ஊழல்கள் இடம்பெற்றதாக வெளியான செய்திகளைத் தொடர்ந்து தனது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்த இந்தியாவின் முன்னாள் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸை மீண்டும் மத்திய அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-10)

### இந்தியாவின் ஆதரவைக் கோரும் யஸீர் அரபாத்

மேற்காசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்தியா தனது ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்று பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் கோரிக்கை விடுத்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா வந்துள்ள அவர் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அப்பாவி மக்கள் பலரின் உயிர்களைப் பலிகொண்ட மேற்காசிய வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர ஐ.நாவில் இந்தியா ஒத்துழைத்து உதவவேண்டும் என்று அரபாத் வாஜ்பாயிடம் கேட்டுக்கொண்டார்.

எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தியையும் அரபாத் சந்தித்துப் பேசினார். (ம-10)

### பங்களாதேஷை வகுப்புவாத நாடாக மாற்றுவதற்குக் கண்டனம்

டாக்கா,ஓக.25

பங்களாதேஷை ஒரு வகுப்புவாத நாடாக மாற்றும் முயற்சிக்கு அனுமதிக்கப்போவதில்லை என்று அந்த நாட்டின் இடதுசாரிக் கட்சிகள் உறுதி தெரிவித்துள்ளன.

பதினொரு இடதுசாரிக் கட்சிகள் இணைந்து இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன. அதில் பங்களாதேஷில் தலிபான் ஆட்சி என்று அண்மையில் தெரிவிக்கப்பட்டுள்ள கோஷங்களை அக்கட்சிகள் கண்டித்துள்ளன.(ம-10)

### கடத்தப்பட்ட ஜேர்மன் பிரஜை விடுதலை

கொலம்பியாவில் உள்ள இரண்டாவது பெரிய இடதுசாரி கெரில்லா அமைப்பினால் கடத்தப்பட்ட ஜேர்மன் பிரஜை படையினரால் விடுவிக்கப்பட்டார். இவரை கடந்த 18 ஆம் திகதி கடத்திச் சென்ற கெரில்லாக்கள் 4லட்சத்துக்கு 50 ஆயிரம் டொலரைக் கப்பமாகக் கோரியிருந்தனர். (ம)


## தேவை

நல்ல நிலையில் உள்ள நோயாளர் பாவனைக் கதிரை தேவையாக உள்ளது. உடன அறியத்தரவும்.

*தொடர்பு:-*

**வி.கே.அருந்தவநாதன்**
உடுவில் வீதி,
மானிப்பாய்.

(91558)


# மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட படையினருக்கு பொதுமன்னிப்பு இல்லை

## இந்திய சட்டமா அதிபர் தெரிவிப்பு

புதுடில்லி,ஓக.25

தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளின்போது மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் படையினருக்குப் பொது மன்னிப்பு வழங்குவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று இந்திய சட்டமா அதிபர் தொலி ஹார்ஜி தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் மாநிலத்தின் ஜலந்தரில் கடந்த ஞாயிறு இடம்பெற்ற இது தொடர்பான கூட்டம் ஒன்றில் கலந்துவிட்டு புதுடில்லி திரும்பிய தொலி ஹார்ஜி இதனைத் தெரிவித்துள்ளார்.

மேற்படி கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட படையினருக்குப் பொது மன்னிப்பு வழங்க இந்திய அரசு ஆராய்கிறது எனக் கருத்து வெளியிட்டுள்ள நிலையில் சட்டமா அதிபர் தொலி ஹார்ஜி இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளின்போது மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் படையினருக்கு எந்தவழியில் விடுதலை அளிக்கலாம் என ஆலோசிக்கப்பட்டு வருவது மட்டும் உண்மை. ஆனால் அவர்களுக்கு எந்தக்காலத்திலும் பொது மன்னிப்பு வழங்கப்படமாட்டாது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-7-10)

# அடுத்த ஆண்டு பாகிஸ்தானில் ஜனநாயகம் திரும்பிவிடும்

## பொதுநலவாய நாடுகள் அமைப்பு செயலர் நம்பிக்கை

இஸ்லாமாபாத்,ஓக.25

அடுத்த வருடம் ஒக்ரோபரில் பாகிஸ்தானில் ஜனநாயகம் மீண்டும் நிலைநாட்டப்பட்டுவிடும் என்று பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் டொன் மைக்கலின் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இரண்டுநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு தற்போது பாகிஸ்தான் சென்றுள்ள டொன் மைக்கலின், ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பைச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்டவேண்டும் என்பதில் ஜனாதிபதி முஷாரப் பெரும் ஆர்வம் உடையவராக இருக்கின்றார். இதனை அவருடன் நடத்திய பேச்சுக்களில் இருந்து அறியக்கூடியதாக இருந்தது.

அடுத்த வருடம் ஒக்ரோபரில் பொதுத் தேர்தலை நடத்தவும் முஷாரப் திட்டமிட்டுள்ளார். எனவே அன்று தொடக்கம் பாகிஸ்தானில் ஜனநாயகம் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு.

- என்று டொன் மைக்கலின் தெரிவித்துள்ளார்.

1999இல் பாகிஸ்தானில் இராணுவப் புரட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து பொதுநலவாய நாடுகள் பாகிஸ்தானின் அங்கத்துவத்தை இடைநிறுத்தியிருந்தமை தெரிந்ததே. (ம-7-10)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அராலி தெற்கைச் சேர்ந்தவரும்,
எமது வைத்தியசாலையில் பணியாற்றி
ஓய்வு பெற்றவருமான
திரு.கதிரவேலு அவர்களின் பாரியார்
**திருமதி மனோன்மணி கதிரவேலு**

அவர்களின் 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (25-08-2001) சனிக்கிழமை நடைபெறுகின்றது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*வைத்திய பொறுப்பதிகாரியும், உத்தியோகத்தர்களும்.*

*அரசினர் கிராமிய வைத்தியசாலை, வட்டுக்கோட்டை.*

(91550)



# நெஞ்சில் நிறைந்த மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 21 - 05 - 1981



உதிர்வு 25 - 08 - 1998

## செல்வி நிஷாலினி நாகேந்திரம்

(2000ஆம் ஆண்டு உயர்தர கணிதப்பிரிவு மாணவி,
பரு.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.)

திதி: ஆவணிச் சதுர்த்தி

முக்கண்ணில் ஒன்றுடைந்து மூன்றாண்டு சென்றாலும்
முப்பொழுதும் உன் நிழல் எம் கண்ணில் காணுதம்மா!
பட்டங்கள் பல பெற்று பலபடிகள் ஏறும் உன்னை
பாதி வழியில் பாதகர்கள் திட்டத்தால் முடித்துவிட்டனர்.
கட்டங்கள் வருமென்று கவலை ஆறுவோம்.
'சுகி' என்ற நாமம் என்றென்றும் நிலைக்கட்டும்!

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*'சுகிஸ்தான்', அல்வாய் தெற்கு, அல்வாய்.*

உமது பிரிவால் வாடிநிற்கும்
**பெற்றோர், உறவினர்கள்.**

(91549)

சிறுப்பிட்டி கிழக்கு பன்னாலை
அண்ணமார் ஆலய
வளர்ச்சி நிதிக்காக நடத்தும்

## மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

இடம்:- நீர்வேலி சவாரித்திடல்
காலம்:- நாளை (26-08-2001) ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 1.00 மணி

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அன்பளிப்பு: ரூபா 10 —நிர்வாகம்
(91555)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி றெஜிஸ் பாமினி (சூட்டி)

ஈச்சமோட்டை, கடற்கரை வீதியைப் பிறப்பிடமாகவும் இராஜசிங்கம் வீதி, கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றெஜிஸ் பாமினி காலமாகிவிட்டார்.

அன்னார் றெஜிஸின் அன்பு மனைவியும், டினோக்குட்டியின் பாசமிகு தாயாரும் பசில் – சந்திரா தம்பதியினரின் பாசமிகு மகளும் அன்ரன் – யோகராணி தம்பதியினரின் மருமகளும் அனுஷா (ஆசிரியை, செ. ஜேம்ஸ் மகளிர் பாடசாலை), சாமினி (ஜேர்மனி), தர்சினி, பகீரதன் (உயர்தர மாணவன், புனித பத்திரிசியார் கல்லூரி), லக்னா (மாணவி, யாழ். கன்னியர்மடம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அருமைச் சகோதரியும் பிரேமளா, சுரேஸ், மொறின், ரதீஸ், சதீஸ், நிறஞ்சன், நிமல் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் செல்வராசா (பொது முகாமையாளர், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம்), தேவராசா (கட்டட ஒப்பந்தகாரர்), அனந்தன் (கனடா), காலஞ்சென்ற ஞானேந்திரம் ராஜி, ரஞ்சி (பூநகரி) ஆகியோரின் மருமகளும் சறோ (புதுக்குடியிருப்பு), சோதி (ஆசிரியை, யாழ். கன்னியர் மடமகாவித்தியாலயம்), றெஜி (கனடா), விஜி (வட்டக்கச்சி), ரவி (பிரான்ஸ்) ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று (25-08-2001) சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணியளவில் நல்லடக்கத்துக்காகக் கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
65, இராஜசிங்கம் வீதி, D. அன்ரன் (மாமன்)
யாழ்ப்பாணம். (91560)

## செல்லையா தியாகராசா

பாலாவோடை, உடுவில் தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த செல்லையா தியாகராசா 22 - 08 – 2001 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பாலாவோடை, உடுவில் தெற்கு, மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (25-08-2001) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காகத் தாவடி இந்து மயானததுக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
க. மோகனராஜகுமார் (மருமகன்)
(வலி. மேற்கு பிரதேச சபை)
பாலாவோடை, உடுவில் தெற்கு,
மானிப்பாய். (91573)

## திருமதி நாகம்மா நடராசா
(இளைப்பாறிய ஆசிரியை)

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட நாகம்மா நடராசா 24-08-2001 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா— ஆச்சிக்குட்டி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் — சீனிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் நடராசா (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னம்மா, நாகரத்தினம், காலஞ்சென்ற தில்லைநாயகி, தில்லையம்பலம் (ஸ்கந்தபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, யோகம்மா, திருநாவுக்கரசு, சோமசுந்தரம், நடனசபாபதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் வனஜா, தயாபரன் (பிரான்ஸ்), பிரபாவதி, மகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இரவீந்திரன் (கிராம அலுவலர், இணுவில் மேற்கு), சந்திரவதனா (பிரான்ஸ்), கிருபாமூர்த்தி (சிவன் ஸ்ரோர்ஸ், இணுவில்), கல்யாணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிந்துஜன், கீர்த்திகா, அருண்பிரசாத், சோபிகா, சேந்தன் (பிரான்ஸ்), கௌசிகன் (பிரான்ஸ்), ாதுலன் (பிரான்ஸ்), துவாரகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26-08-2001) ஞாயிற்றுக்கிழமை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும.

தகவல்:
இணுவில் மேற்கு அ. நடராசா
இணுவில். (கணவர், இளைப்பாறியஆசிரியர்)
(91572)

## முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக. 25

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் சுதுமலைப் பகுதியில் நடத்தப்பட்டு வரும் யுவசக்தி முன்பள்ளிப் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சங்கத்தின் தலைவர் கணபதிப்பிள்ளை மகாலிங்கம் தலைமையில் சுதுமலை தெற்கு அ. த. க. பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. தென்மேற்குப் பிராதச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் கலந்து கொள்வார். (ம-10)

★ ★ ★

சங்கானை — தொட்டிலடி சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் கண்ணன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவரும், வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளருமான ஆ. வ. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விளையாட்டு விழாவில் வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (க-7)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, ஒக். 25

யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் மானிப்பாய் ஆனந்தா விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் தாச்சி சுற்றுப்போட்டி இறுதி ஆட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு ஆனந்தா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ம-86)

★ ★ ★

யாழ். உதைபந்தாட்ட லீக் யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடத்தி வரும் தலைவர் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நடைபெற உள்ள குழுநிலைத் தெரிவுப்போட்டியில் குருநகர் சென்றோக்ஸ் அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் வி. க. அணி மோதும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள போட்டியில் பாஷையூர் சென். அன்ரனீஸ் வி. க. அணியை எதிர்த்து குருநகர் பாடும் மீன் வி. க. அணி மோதும். (ம-51)

★ ★ ★

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நவாலி நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நவாலி அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் நவாலி சென். பீற்றர்ஸ் வி. க. அணியை எதிர்த்து காங்கேசன்துறை ஐக்கிய வி.க. அணி மோதும்.

கொக்குவில் ஐக்கிய வி. க. அணியை எதிர்த்து நாவாந்துறை இளைஞர் வி. க. அணி மோதும். (ம-86)

## அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக. 25

இருபாலை கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலைய புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம், உபதலைவர் யு. எல். ஏ. ரவி ஆகியோர் அடிக்கல்லை நட்டுவைப்பர். (ம-9)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன அழைப்பும்

அன்புடையீர்!

14-8-2001 செவ்வாய்க்கிழமை அமரத்துவம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

## பிரம்மஸ்ரீ சிவசாமிக்குருக்கள் பரமேஸ்வரசர்மா

அவர்களின் ஆத்ம சாந்திக்காக மானிப்பாய் மருதடி விநாயகர் திருக்கோயிலில் 28-8-2001 செவ்வாய்க்கிழமை பகல் 11-30 மணிக்கு ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் மதியபோசனமும் நடைபெறும். அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்ட அனைத்துக் கிராமங்களைச் சேர்ந்த அன்பு உள்ளங்களையும் இந்த நிகழ்வில் பங்கு கொண்டு அவரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகிறோம்.

★ இதையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இவ்வண்ணம்
பிரம்மஸ்ரீ ப. ஜெயக்குமாரக்குருக்கள்
(மகன் – மருதடி, மானிப்பாய்)
பிரம்மஸ்ரீ ப. முத்துக்குமாரசர்மா (மகன்–நல்லூர்)
பிரம்மஸ்ரீ இ. பாலச்சந்திரக்குருக்கள்
(மருமகன் – இளவாலை)
பிரம்மஸ்ரீ சி. ரவிச்சந்திரசர்மா
(பெறாமகன் - மானிப்பாய்) (91567)

# 2ஆம் ஆண்டு நினைவலைகள்

காரினியில் 13 — 06 — 1981



கந்தனடியில் 25 — 08 — 1999

## செல்வி திருமகள் கனகசபை

திதி: பூர்வபக்க சதுர்த்தசி 01-09-2001

திருமகளே! எம்மரிய தவமகளே!
திருவெல்லாம் எமக்களித்த ஒருமகளே!
திருவெல்லாம் எமக்களித்து (நீ) எங்கு சென்றாய்?
திருவிழாக்காண வென்று எண்ணியே இருந்தோம்!
திரும்பாமல் பாதியிலே (நீ) எங்கு சென்றாய்?
அன்னதானக் கந்தனிடம் அடியளிக்கச் சென்று
அவன் தாள்கள் சேர்ந் னையோ?
ஆண்டிரண்டு சென்றதம்மா நீ சென்று
ஆனாலும் நாம் மறக்கவில்லையம்மா!
அமைதி தர எமக்காருமில்லையம்மா!

உமது பிரிவினால் துயருறும்:
அப்பா, அம்மா, சகோதரர்கள்.

தற்காலிக முகவரி:
125, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

நிரந்தர முகவரி:
மீசாலை வடக்கு,
மீசாலை.

(91456)

# மரண அறிவித்தல்

## திருமதி விஜயாம்பாள் மகாதேவன் சோமசுந்தரம்

நல்லூரைச் சேர்ந்த திருமதி விஜயாம்பாள் 22 - 08 – 2001 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகாதேவன் சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் இரவீந்திரன் (கனடா), விஜித்தா (கொழும்பு) ஆகியோரின் அன்புத்தாயாரும் விஜயரட்ணத்தின் அன்புச் சகோதரியும் சட்டத்தரணி பா. தவபாலன், இ. ஜெயகலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ரஜீவ் (Chutt University, London) காண்டீபன் (சென்ஜோன்ஸ் கல்லூரி), சாயிசஞ்சீவி (பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி), தவலக்ஷ்மி (சைவ மங்கையர் கழகம், கொழும்பு), லக்ஷ்மி (அமெரிக்கா), சிவகணன் (லண்டன்). அபிராமி (லண்டன்), அருண் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காந்திமதியின் அன்பு மைத்துனியும் கனகதுரை (லண்டன்) மகாலக்ஷ்மி (அமெரிக்கா), Dr. இராஜநாயகம் (அமெரிக்கா), சுதர்சினி (லண்டன்) ஆகியோரின் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (25-08-2001) இன்று சனிக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்றுத் தகனக்கிரியைகள் காலை 10 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
82/5, குறுக்கு வீதி, லயன் பா. தவபாலன்
நல்லூர், (சட்டத்தரணி)
யாழ்ப்பாணம். (91571) T. P. 3147

உதயன்

## அமெரிக்க வலையில் தெற்கு அரசியல்!

இலங்கைத் தீவின் வாழ்வையே நாசம் செய்துகொண்டிருக்கும் இனப் பிரச்சினைக்கு அரசியல் வழியில் - பேச்சு மூலம் - காணப்படும் அமைதித் தீர்வே நிரந்தர சமாதானத்தையும் அமைதியையும் கொண்டுவரும் என்பது பலருக்கும் தெரிந்த விடயம்தான்.

இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு சாத்தியமற்றது என்பது யுத்தத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்புகளுக்கும் மட்டுமன்றி மக்கள் அனைவருக்கும் கூடத் தெரிந்த உண்மைதான்.

மூன்றாம் தரப்பாக இந்த பிணக்குக்கு மத்தியஸ்தம் செய்ய வந்த இந்தியா, கட்சிக்காரர்களிடம் கேட்காமல், தானே ஒரு கட்சிக்காரராகி, மற்றைய கட்சிக்காரனுடன் ஒப்பந்தம் செய்து, ஈழத்தமிழரிடம் வாங்கிக் கட்டிக் கையைச் சுட்டுக்கொண்டு இலங்கையிலிருந்து வெளியேறிய சற்றுக்காலத்தில் 'ஈழப்போர் -2' வெடித்தது.

அன்று முதல் இந்தப் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வுகாண வேறு மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் அவசியம் என்பது வலியுறுத்தப்பட்டு வந்தது.

ஆனால் அப்போது ஆட்சியிலிருந்த ஐ.தே.கட்சி அரசும் அதன் தலைவர்களும் இது உள்நாட்டுப் பிரச்சினை, வெளிநாட்டினதோ அல்லது வெளியாளினதோ மத்தியஸ்தத்துக்கோ அல்லது தலையீட்டுக்கோ இடமில்லை என்று ஒதுக்கித்தள்ளி அந்த நிலைப்பாட்டில் ஒற்றைக் காலில் நின்றனர்.

அதனால் சமாதானத்துக்கான கதவுகள் மூடப்பட்டுக்கிடந்தன.

இந்த நிலையில் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பேன் என்ற கோஷத்தோடு தேர்தல் களத்துக்கு வந்த சந்திரிகா அம்மையாரை மக்கள் சமாதான தேவதையாகவே நோக்கினர். வாக்குகளை அள்ளிக்கொட்டி அவரை ஆட்சிப் பீடத்தில் அமரவைத்தனர்.

ஆனால் சமாதான இரட்சகர், யுத்த இராட்சதராக மாறிய அவலத்தை கடந்த ஏழு ஆண்டு காலத்துக்குள் ஈழத் தமிழ்மக்கள் கண்டு அனுபவித்தனர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் வார்த்தைகளில் கூறுவதானால் - ஈழத் தமிழர்கள் தங்கள் மீது முன்னெப்போதும் இல்லாத மிகக் கொடூர யுத்தத்தை ஏவிவிட்ட சிங்கள அரசுத் தலைவராகச் சந்திரிகாவை கருதும் நிலை வந்தது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை கொள்கை அளவில் ஏற்பதாக அறிவித்து, நோர்வேயை மத்தியஸ்தம் வகிக்க அழைத்ததன் மூலம் தன்னை சமாதான விரும்பி போலக் காட்டிக்கொண்ட சந்திரிகா, நோர்வே தனது மத்தியஸ்த முயற்சியில் முன்னேற்றம் காணாதவாறு மறைமுக முட்டுக்கட்டைகளைப் போட்டதன் மூலம் தனது போர் விருப்பம் யதார்த்தத்தில் தொடர்வதை உறுதி செய்துகொண்டார்; ஈழத்தமிழர்களுக்கு ஓர் அமைதித் தீர்வு கிட்டாமல் பார்த்துக்கொண்டார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை எதிர்த்த - அல்லது அதற்கு மறைமுக முட்டுக்கட்டை போட்ட - இந்த இரண்டு பேரினவாத சிங்களக் கட்சிகளும் இப்போது தங்களுக்குள் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு இணங்கியிருப்பதுதான் வேடிக்கையிலும் வேடிக்கை.

மாறி மாறி ஆட்சிக் கட்டில் ஏறிய இரண்டு கட்சிகளும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி - சட்டமாக்கும் நாடாளுமன்றம் என்று, இதில் எது பெரியது - அதிகாரம் மிக்கது - என்று நடத்திவரும் அரசியல் பூசலுக்கு முடிவு கட்டுவதற்குக் கடைசியாக, இருவருக்கும் இடையில் அமெரிக்கா தலையிடும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

"ஆனை புகுந்த விடும் அமீனா புகுந்த விடும் உருப்படாது" என்பது பழைய மொழி. அத்தோடு "அமெரிக்கா புகுந்த நாடும் உருப்படாது" என்பதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று உலக அரசியல் புரிந்தவர்கள் கூறுவார்கள்.

சிண்டு பிடித்து மேலும் இரண்டு சிங்களக் கட்சிகளும் தமது குடுமியின் பிடியை இப்போது அமெரிக்காவிடம் ஒப்படைத்திருக்கின்றார்கள்.

இந்த நாடகத்தின் கதம்ப நிகழ்வுகள் அடுத்த வாரத்தில் கொழும்பில் மேடையேறும் என எதிர்பார்க்கலாம்.

## துரையரின் (நன்னாரி) தேநீர் கடை

'சாத்திரியாரின் சாப்பாட்டுக் கடை' போலவே அப்போது மருதனார்மடச் சந்தியிலிருந்த 'துரையரின் தேநீர் கடையும்' என்னை நினைக்கவும் சிந்திக்கவும் வைக்கிறது...... அது சாதாரண தே.கடையல்ல. 'நன்னாரித் தேத்தண்ணிக் கடை' எனும் அடைமொழியும் பெற்று விளங்கியது.

'அது' பற்றித் தெரிந்தவர்கள், அந்த இடத்தால் போய்வரும் போதெல்லாம் அங்கு தரித்து நன்னாரித் தேநீர் அருந்தத் தவறுவதில்லை. வேறு சிலர் வில்லங்கமாகவேனும் அந்த இடத்துக்கு வலிந்து போய்வருவதுண்டு. காரணம் துரையரின் நன்னாரித் தேநீரின் மகிமைதான்!

நல்ல தேயிலையைக் கொண்டு தயாரிக்கும் தேநீருக்கு மேலதிகமாக எதுவும் சேர்த்துக் கொள்ள வேண்டியதில்லை. அதிலேயே சில தனித்துவங்களும் மருத்துவப் பயன்களும் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இருப்பினும் இஞ்சித் தேநீர், நன்னாரித் தேநீர் - இவைகளைப் பொறுத்தவரை அவைகளில் விதிவிலக்குகள் இருக்கும்போல எனக்குத் தெரிகிறது.

குடாநாட்டுக்கு வெளியே இப்பொழுது சில குறிப்பிட்ட கடைகளில் இஞ்சித் தேநீர் குடிக்கலாம் என்றிருக்கிறது. தேநீரில் - அதுவும் குறிப்பாக வெறும் தேநீரில் அளவாக இஞ்சி கலந்தால், அதிலும் ஒரு தனிச் சுவையும் மருத்துவப் பயனும்கூட இருக்கிறது. குடித்ததும் அசதி நீங்கி புத்துணர்ச்சி பெற்ற உணர்வு தெரியும். (அதற்காக மரவெள்ளிக் கிழங்கு சாப்பிட்ட கையோடு அதனைக் குடித்து விடாதீர்கள்). எதற்கும் அளவுதான் முக்கியம். சுன்னாகம் நீர் வழங்கல் சபையினர் சில சமயங்களில் செய்வதுபோல குடிநீருக்குள் அளவுக்கதிகமான குளோரினைக் கலந்துவிடக்கூடாது. மீண்டும் சொல்லுகிறேன் அளவு முக்கியம்..... 'மிகினும் குறையினும் நோய் செய்யும்' என்பது வள்ளுவர் வாக்கு.....

மீண்டும் துரையரின் கடைக்கே வருவோம். அவரின் கடையும் ஆரம்பத்தில் மண்சுவர் கொட்டகையாக இருந்துதான் படிப்படியாக வளர்ச்சி கண்டது. அதுவும் ஒரு மூக்குப்பேணிக் கடைதான்..... வெளிப்பேணி கூட இருந்ததாக நினைவு.... 'தேநீர் கடைப் பிரவேச' காலத்தில் அந்தக் கடைக்கும் இலக்கு வைத்துப் போனது நினைவுக்கு வருகிறது.... கடையில் சுடச்சுடச் சுவையான வடை, வாய்ப்பன், பகோடா, மோதகம், சூசியம் எல்லாம் கூட இருக்கும். இருந்தாலும் கடைக்குக் 'கியாதி' வந்தது என்னவோ நன்னாரித் தேநீரால்தான்.....

கடை முதலாளி துரையரும் சரி, அவருக்கு உதவியாகச் சில சமயங்களில் நிற்கும் சகோதரனும் சரி 'காந்திக் கோலத்தவர்கள்'.... சாரமோ நாலுமுழ வேட்டியோதான் அணிந்திருப்பார்கள்..... வண்டிக்காரர்கள்.... அதாவது வயிற்றோடு சம்பந்தப்பட்ட வண்டியைச் சொல்லுகிறேன். இருவருமே அதிகம் பேசமாட்டார்கள்... 'உம்' மென்றுதான் இருப்பார்கள்.... பேசுவதெல்லாம் நன்னாரித் தேநீர்தான்......




இப்பொழுது வடலியடைப்பில் வசிக்கின்ற செல்வராசா என்பவர் அப்பொழுது எங்கள் கூட்டாளியாக இருந்தவர். அவருக்கு இருந்தாற்போல நன்னாரித் தேநீரின் நினைவு வந்துவிடும். பேச்சுவாக்கில் ஏதாவது பந்தயம் என்று வந்தாலும் நன்னாரித் தேநீரைத்தான் 'பணயப் பொருளாக' வைப்பார், நன்னாரித் தேநீர் வாங்கித் தருவதாக அல்லது வாங்கித் தரவேண்டும் என்பதாக படம் பார்க்கின்ற திட்டம் என்று வந்தால், இணுவில் மஞ்சாலிங்கம் மடுவத்துக்குப் போகலாம் என்பார். வரும்போது மருதனார்மடச் சந்தியில் தேநீர் குடிக்கலாம் என்பதற்காக.... சுன்னாகத்துக்குப் போவதற்குக் குறுக்குப் பாதை இருக்க, 'ஏன் குறுக்காலை போவான் மருதனார்மடத்தால் போவம்' என்பார். அதிகம் ஏன், வேறு சோலிகள் இல்லாவிட்டால் கூட அதற்கென்றேகூட எம்மை அங்கு இட்டுச் செல்வதுமுண்டு. அந்தளவுக்கு அவர் நன்னாரியின் பெருமை தெரிந்தவர் மட்டுமல்ல, தாம் பெற்ற சுவையினைத் தமது கூட்டாளிகளும் பெறவேண்டும் என்ற நல்லெண்ணமும் உடையவர்.

கடையில் போதியளவு வாங்கு, மேசைகள் இருப்பதில்லை . அதனால் நாம் சிலவேளைகளில் நின்றவாறும் தேநீர் குடிப்பதுண்டு. நாம் எடுப்பது அநேகமாக தேநீர் மட்டும்தானே! அங்கும் செல்வராசா, துரையரின் முகவர் போலத்தான் நடந்து கொள்வார். தேநீரைச் சுவைத்துக் குடித்தவாறே "தேத்தண்ணி எப்படி இருக்கிறது?" என்று எம்மிடம் அபிப்பிராயம் கேட்பார். அது, இந்தப் பட்டாளத்தைத் தான்தான் அழைத்து வந்ததாகத் துரையருக்கு உணர்த்துவான் வேண்டியும் இருக்கலாம் அல்லது அவரது முகத்திலே புன்னகையை வரவழைக்கும் பகீரத முயற்சியாகவும் இருக்கலாம்.

சீரைக் கடைக்கும் எதிர்க்கடை போடுவது நம்மவர்களின் வழக்கம். ஒருவர் 'மிக்ஸர்' தொழில் தொடங்கி நல்லாய் வந்தால் போதும். அதற்குப் போட்டியாக மூலைக்கு மூலை 'மிக்ஸர்' தொழிலகங்கள் முளைத்துவிடும். ஒருவர் தொலைத்தொடர்பு நிலையம் அமைத்து 'ஓகோ' என்று வந்துவிட்டால் போதும், 'அகா விட்டேனா பார்' என்று அதற்குப் பக்கத்தில் மேலும் சில நிலையங்கள் தோன்றிவிடும். பின்னர் எல்லா அகங்களிலும் நிலையங்களிலும் 'ஈ'யோட்டிக் கொண்டிருப்பார்கள். ஆனால் -

துரையரின் நன்னாரித் தேநீர்க் கடைக்குப் போட்டியாக வேறு கடைகள் அப்பொழுதும் சரி பின்னாளிலும் சரி தோன்றாததற்குக் காரணம் என்னவாக இருக்கும்?

பழையகால வைத்திய வாகடங்கள் போல அந்தக் காரணமும் துரையரோடு போய்விட்டிருக்குமோ!

-சனி அங்கிள்.

### சேமலாப நிதிக்கு விண்ணப்பிப்போர்

## ஆவணங்களுடன் நேரில் வரவேண்டுமென அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஒக.25

யாழ்ப்பாணம் தொழில் திணைக்களத்தில் ஊழியர் சேமலாப நிதியை பெற விண்ணப்பிப்பவர்கள் அந்த விண்ணப்பப்படிவத்தில் கேட்கப்பட்ட ஆவணங்களுடன் நேரில் தொழிற் திணைக்களத்திற்கு வந்து உரிய பதிவுகளை மேற்கொள்ளவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவத்தில் கேட்கப்பட்டதன்படி அந்தந்த பிரதேசசபைத் தலைவர்களின் உறுதிப்படுத்தல் கூற்று, தேசிய அடையாள அட்டைப் பிரதி, பிறப்புச் சான்றிதழ் பிரதி, வங்கிப்புத்தகம் என்பவற்றுடன் தொழில் திணைக்களத்துக்கு வந்து உரிய முறையில் பதிவு செய்யாதவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என யாழ்.தொழிற் திணைக்கள உதவி ஆணையாளர் ஆர்.தர்மலிங்கம் தெரிவித்தார்.

அதேவேளை சில பிரதேச சபைகளில் பணிபுரியும் அதிகாரிகள் தம்மிடம் வருகின்ற உறுதிப்படுத்தல் விண்ணப்பப்படிவங்களை விண்ணப்பதாரிகளிடம் திருப்பி ஒப்படைக்காமல் தாங்களே தபால் மூலம் தொழில திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கின்றனர்.

இதனால் தொழிற் திணைக்கள அதிகாரிகள் பல சிரமங்களை எதிர்நோக்குவதுடன் இவ்வாறு அனுப்பப்படும் சில விண்ணப்பங்களை ரத்துச் செய்யும் நிலைக்கும் தள்ளப்படுகின்றனர் என்றும் அவர் மேலும் கூறினார்.

வலி.தெற்கு பிரதேச சபை, அச்சுவேலி பிரதேச சபை ஆகியவற்றிலிருந்து அண்மையில் சில விண்ணப்பப்படிவங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அந்த விண்ணப்பப் படிவங்களுக்குரிய விண்ணப்பதாரிகள் நேரடியாக தொழில் திணைக்களத்துக்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் சொன்னார். (ம-4)

### நாளை

ஆவணி 10,
ஞாயிற்றுக்கிழமை
திதி: அட்டமி
முன்னிரவு : 7.08 வரை
நட்சத்திரம் : அனுஷம்
பின்னிரவு 10.00 வரை
கோஷ்டாஷ்டமி நாள்
சுபநேரம்: 9.55 - 10.35
ராகுகாலம் : 4.35 - 6.05
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தேவையற்றதை வாங்காதே; தேவையானதை விற்காதே.

## நாட்டு நடப்பு

### புடலையும் பின்னலும்

*பார்க்க நீண்டிருக்கும் பக்குவமாய் ஆடி நிற்கும்*
*காற்றில் ஆடாமல் கடைசியில் முடிச்சிருக்கும் – ஏற்றமுற*
*தாங்கும் அழகு தாண்டிவிடும் கொடி அழகை*
*பாங்கான புடலையும் பாவையரின் பின்னலும் ஒன்றே அறி.*

*- விகடகவி.*

## இலங்கை செல்வதற்கு முன் அனுமதி பெறப்படவேண்டும்

### தனது அலுவலர்களுக்கு ஐ.நா. அறிவிப்பு

லண்டன்,ஒக.25

ஐ.நா.சபையின் ஊழியர்களும் ஆலோசகர்களும் இலங்கைக்கு செலவதற்கு முன்னர் சபையிடம் அனுமதி பெற வேண்டும் என்று ஐ.நா.சபையின தலைமை அறிவித்துள்ளது.

இலங்கையில் பணிபுரியும் சபையின் அலுவலர்களிடம் இருந்து கிடைத்த பாதுகாப்புத் தொடர்பான தகவல்களின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் - கடந்த 20ஆம் திகதி முதல் இந்த நடைமுறை அமுலுக்கு வந்துள்ளதாகவும் -

ஐ.நா.சபையின் பாதுகாப்பு இணைப்பாளர் அதன் சகல பிரிவுக்கும் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கை செல்வதற்கான பயண அனுமதியை கொழும்பில் உள்ள 'யுனிசெவ்' பிரதிநிதியிடம் பெறவேணடும் என்றும் அவர் கூறியுள்ளார். (ம-3-10)

## துண்டியில் உடல்களைத் தகனம் செய்ய அனுமதியைப் பெற்றுத் தாருங்கள்!

### இந்து மன்றம் அமைச்சருக்குக் கடிதம்

அரியாலை,ஒக.25

கொழும்புத்துறையில் உள்ள துண்டி இந்து மயானத்தில் உடல்களைத் தகனம் செய்வதற்கு அனுமதி பெற்றுத் தருமாறு கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி மன்றம் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

கொழும்புத்துறை மேற்கு, ஈச்சமோட்டை, கொய்யாத்தோட்டம், புங்கன்குளம் பகுதிகளில் தற்போது மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர். இந்தப் பகுதிகளைச் சேர்ந்தவர்களின் பூதவுடல்கள் முன்னர் துண்டி மயானத்திலேயே தகனம் செய்யப்பட்டு வந்தன.

ஆனால் இந்த மயானத்துக்குச் செல்வதற்கு இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை.

இதனால் இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் தூர இடங்களுக்குக் கால்நடையாகச் சென்றே இறுதிக்கிரியைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனைக கருதத்திற்கொணடு துண்டி மயானத்தை மீண்டும் பாவிக்க அனுமதி பெற்றுத் தருமாறு இந்து இளைஞர் மன்றம் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (க-17)

### பளை ப.நோ.கூ. கிளை ஒன்றில்

## நிவாரணத்துக்கு குறுணல் அரிசி வழங்கப்பட்டதாக முறைப்பாடு

வடமராட்சியில் இயங்கும் பளை ப.நோ.கூ. சங்கக் கிளை ஒன்றில் நிவாரணத்துக்கு வழங்கிய அரிசி சமைக்க முடியாத அளவுக்குக் குறுணல் இருப்பதாகப் பொதுமக்களால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கத்தால் வழங்கப்பட்ட அரிசியும் அமைச்சருக்குப் பொதுமக்களால் காட்டப்பட்டது.


இதனையடுத்து இது தொடர்பாக விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.அரச அதிபருக்கு அமைச்சர் அறிவித்துள்ளதுடன் பொதுமக்களால் வழங்கப்பட்ட குறுணல் அரிசியையும் அவரின் பார்வைக்கு அனுப்பிவைத்துள்ளார்.

நிவாரணத்துக்கு வழங்கப்படும் அரிசி குறுணலாக இருந்தமை தொடர்பாக யாழ். செயலக திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கத்திடம் கேட்டபோது -

நாம் நிவாரணத்துக்கு குறுணல் அரிசி வழங்கவில்லை அவ்வாறு ஒரு சில அரிசி மூடைகள் தரம் குறைந்ததாக இருந்தால் அவற்றை எமக்குத் திருப்பி அனுப்புமாறு ப.நோ.கூ.சங்கங்களுக்கு அறிவித்துள்ளோம்.

இதனால் எந்தவொரு ப.நோ.கூ.சங்கமும் பொதுமக்களுக்குத் தரம் குறைந்த அரிசியை விநியோகிக்கத் தேவையில்லை, அவற்றை எமக்குத் திருப்பி அனுப்பிவிடலாம். அதற்குப் பதிலாகத் தரமான அரிசி மூடைகள் உடன் வழங்கப்படும் - என்றார். (க-6)


### கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில்
12
-
05
-
1939



விண்ணில்
26
-
07
-
2001

திருமதி
## கதிரவேற்பிள்ளை மனோன்மணி

எங்கள் குடும்ப இல்ல விளக்கு திருமதி கதிரவேற்பிள்ளை மனோன்மணி அவர்களின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்து கொண்டோருக்கும், கடிதங்கள், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், உற்றார், உறவினர், நண்பாகள் அனைவருக்கும் அன்னாரின் இறுதிக்கிரியை சிறப்புடன் நடந்தேற தோள் கொடுத்து பல வழிகளிலும் உதவியமைக்காகவும் இன்றைய அந்தியேட்டி வைபவத்தில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

*அராலி தெற்கு,*
*வட்டுக்கோட்டை.*
(91478)
குடும்பத்தினர்.


## Jaffna College Institute of Technology
## Vaddukoddai, Sri Lanka

*Students are welcome to register for the following courses commencing from first week of September 2001*

- **Technician Diploma Courses (NDT Level Courses)**
  - Electronics & Telecommunication Engineering
  - Civil Engineering *Duration: 3 Years (full time)*
- **Diploma Courses**
  - Advanced Diploma in Computing
  - Diploma in Computer Programming
  - Diploma in Draughtsmanship (Civil)
  *Duration: 1 Year (full time)*
- **Technician Certificate Courses**
  - Basic Engineering
  - Electronics *Duration: 1 Year (full time)*
- **Certificate Courses in Business & Scientific Applications**
  - MS Word
  - FoxPro
  - MS Excel
  - JAVA
  - MS Access
  - Visual Basic 6.0
  - dBase III+
  - MS PowerPoint
  - Pascal
  - Computer Hardware
  - C/C++
  *Duration: 3 - 4 Months*
- **Certificate Craft Courses** (தமிழ் மூலம்)
  - Mechanical Craftsman Practice (இயந்திரத்தொழில்நுட்பப் பயிற்சி)
  - Electrical Wiring & Installation Practice (மின் இணைப்பும் நிர்மாணமும்)
  - Automobile Technology (மோட்டார் வாகன தொழில்நுட்பம்)
  - Radio & T.V. Servicing (றேடியோ ரீவி பழுதுபார்த்தல்)
  - Foundry Practice (வார்ப்பு பயிற்சி)
  - Air-Conditioning & Refrigeration (குளிரூட்டல் பயிற்சி)
  *Duration: 6 - 12 Months (full time)*

**NOTE :-**
- Open University Exemption
- Our Diplomas Guide the students to the Examinations of the following bodies
  - CITY & GUILDS OF LONDON INSTITUTE
  - ENGINEERING COUNCIL OF LONDON
  - AUSTRALIAN COMPUTER SOCIETY (ACS)
  - BRITISH COMPUTER SOCIETY (BCS)
- Facilities
  - Library, Hostel & Sports

*Application forms are available at*
- *JCIT, Vaddukoddai*
- *Undergraduate department, Jaffna College (Hospital Road, Jaffna)*

**DIRECTOR**
Jaffna College Institute of Technology
Vaddukoddai.

(C/17962)


### அரசியல் ஸ்திரமற்ற சூழ்நிலை காரணமாக

# நாட்டை விட்டு வெளியேறி வரும் விஞ்ஞானிகள், தொழில்சார் நிபுணர்கள்!

## விஞ்ஞான முன்னேற்றச் சங்கத் தலைவர் வேதனை

கொழும்பு,ஓக.25

நாட்டில் நிலவும் நிலையற்ற இன்றைய அரசியல் சூழ்நிலையில் எதிர்காலம் பற்றிய சந்தேகங்களுடன் விஞ்ஞானிகளும் தொழில்சார் நிபுணர்களும் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். எனவே வசைபாடும் அரசியலைக் கைவிட்டு உருப்படியான செயற்பாடுகளில் அரசியல் தலைவர்கள் ஈடுபடவேண்டும்.

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் மேற்கண்டவாறு கோரியுள்ளது.

இலங்கை விஞ்ஞானிகள் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்தச் சங்கத்தின் தலைவர் ஒலீப் பெர்னாண்டோ விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"இலங்கையின் விஞ்ஞானிகளாகிய நாம் இன்று இலங்கை எதிர்கொள்ளும் அரசியல், சமூக, பொருளாதார பிரச்சினைகளை மிகுந்த அகறையுடனும், கவலையுடனும் நோக்குகின்றோம். வன்முறைகள், குற்றச் சம்பவங்கள் அதிகரிப்பதையும், ஒழுக்கப் பண்பாட்டு நடத்தைகள் சீர்குறைவடைந்து செல்வதையும், அரசியல் ஸ்திரமின்மை மோசமாகிவருவதையும் நாம் கடந்த சில தசாப்தங்களாக கண்டுவருகிறோம்.

நாட்டின் பல பகுதிகளிலும் சமாதானமும், ஐக்கியமும் பயங்கரமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றன. நிலையற்ற இந்தச் சூழல் விஞ்ஞானிகள் உள்ளிட்ட பொதுமக்கள் அனைவரையும் பாதுகாப்பற்ற நிலையையும் எதிர்காலம் பற்றிய சந்தேகங்களையும் உணரும்படி வைத்துள்ளது. இதனால் விஞ்ஞானிகளும் தொழில்சார் நிபுணர்களும் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். எஞ்சியுள்ளவர்களும் தேசிய வளர்ச்சிக்கு பங்களிப்பை வழங்குவதில் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றனர்.

எனவே, அரசியல்வாதிகள், எந்தவொரு நல்ல முடிவுக்கும் இட்டுச் செல்லாத வசைபாடும் அரசியலை கைவிடுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம். நாடாளுமன்ற ஜனநாயகத்தை மீளப்பெறுவதை உறுதிசெய்யும் வகையிலும், இலங்கையின் சகல பகுதிகளிலும் சட்டம், ஒழுங்கு, சமாதானம் ஆகியவற்றை மீள நிலைநிறுத்தும் வகையிலும் தமது விசுவாசமான உழைப்பையும் தமது செல்வாக்கு உட்பட அனைத்தையும் பயனபடுத்தும் படியும் விநயமாக வேண்டிக்கொள்ளுகின்றோம் - என்றுள்ளது. (க-3)

### ஜனார்த்தனம் கொழும்பு வருகை

கொழும்பு,ஓக.25

உலகத் தமிழர் பேரவைத் தலைவர் கலாநிதி இரா.ஜனார்த்தனம் கொழும்புக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

'உலகில் தமிழர்' எனும் தலைப்பில் அவர் வெளியிடவுள்ள நூலுக்கு தகவல்களைக் சேகரிப்பதற்காகவே அவர் கொழும்பு வந்துள்ளார்.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான், தமிழர் விடுதலைக் கூட்டணி சிரேஷ்ட உபதலைவர் வீ.ஆனந்தசங்கரி, நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உட்படப் பலரைச் சந்தித்து இங்குள்ள நிலைமைகளை அவர் கேட்டறிந்துள்ளார்.

### நாகர்கோயிலில் மோதல்

கொழும்பு,ஓக.25

நாகர்கோயில் பகுதியில் விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலை மீது கடந்த புதனன்று காலை 8.45 மணியளவில் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் மூவர் உயிரிழந்திருக்கக்கூடும் என்றும் -

புலிகள் நடத்திய பதில் தாக்குதலில் ஐந்து சிப்பாய்கள் காயமடைந்ததாகவும் -

விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (உ-ஒ)

### போதைப் பொருள் விற்ற பெண் கைது

கொழும்பு,ஓக.25

ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த வெளிநாட்டுப் பெண்ணொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 5 மாதங்களுக்கு முன்பு இலங்கைக்கு வந்த இந்தப் பெண் கல்கிசைப் பகுதியில் வீடொன்றில் வாடகைக்குத் தங்கியிருந்து போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேற்படி பெண்ணிடமிருந்து 24 கிராம் ஹெரோயினைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ம-10)

## வாழ்த்துகின்றோம்



பொன்விழாக் காணும் வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர்
உயர்திரு.நா.வன்னியசிங்கம்
அவர்கள்
பல சிறப்புப் பெற்று பல்லாண்டு வாழ
வாழ்த்துகின்றோம்.

(91514)
திரு.திருமதி சத்தியவரதன்,
நெடுந்தீவு.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

25-08-2001



## செல்வி ரகுபதி கயூரிகா

புத்தூர் மேற்கைச் சேர்ந்த
ரகுபதி - இலங்கேஸ்வரி
தம்பதியரின் செல்வப் புதல்வி
செல்வி கயூரிகா

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (25-08-2001) சனிக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சுவிஸில் வசிக்கும் பெரியமாமா, லண்டனில் வசிக்கும் சின்னமாமா, அன்ரா - பெரியத்தை மற்றும் பெரியப்பாமார், சித்தப்பாமார், அத்தைமார், மாமாமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணாமார், அக்கா, தம்பி மற்றும் உற்றார், உறவினர்கள் சீரும் சிறப்பும் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென அன்புடன் வாழ்த்துகின்றனர்.

*புத்தூர் மேற்கு.*
*மருதடி.*
(91462)
அம்பிகாபதி ரகுபதி.

# அந்தியேட்டிக்கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு
31
-
08
-
1916



உதிர்வு
27
-
07
-
2001

திருமதி
## பாக்கியம் குமாரசாமி

27.07.2001 வெள்ளிக்கிழமை அமரத்துவம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு பல வழிகளிலும் எமது துக்கத்தில் பங்குகொண்டு உதவிகள் புரிந்தவர்களுக்கு எங்கள் நன்றியை பணிவன்புடன் சமர்ப்பிப்பதோடு நாளை (26.08.2001) ஞாயிறு காலை 6 மணிக்கு கீரிமலை தீர்த்தாங்குளத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும், நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

"பிருந்தாவனம்"
*இடைக்காடு,*
*அச்சுவேலி.*
(91374)
திரு.திருமதி சிவஞானசுந்தரம்
மருமகன் - மகள்.

# மனித உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தத் திட்டம்

## வை.எம்.சி.ஏ.யில் புதிய பிரிவு உருவாக்கம்

யாழ்ப்பாணம் ஓக.25

மனித உரிமைகள் தொடர்பாகவும் அவை மீறப்படும்போது எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பாகவும் குடாநாட்டு மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் வை.எம்.சீ.ஏ. நிறுவனம் மனித உரிமைகள் பிரிவு ஒன்றை புதிதாக ஆரம்பித்துள்ளது.

இந்த மனித உரிமைகள் பிரிவின் இணைப்பாளராக எஸ். சாள்ஸ் பிறவுன்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் இந்த அமைப்பின் செயற்பாடுகள் குறித்து தெரிவித்ததாவது:-

குடாநாட்டு மக்களைப் பொறுத்த மட்டில் மனித உரிமைகள் என்றால் என்ன என்பதில் அவர்களுக்குத் தெளிவு இல்லை. மனித உரிமை எவ்வாறு மீறப்படுகிறது, மீறப்பட்டால் என்ன செய்ய முடியும்? என்பன குறித்து அவர்கள் அறியாதவர்களாக உள்ளனர்.

இந்த நிலையில் மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே எமது அமைப்பின் பிரதான நோக்கமாகும்.

நாம் மனித உரிமை மீறப்படும் சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்டரீதியிலான உதவிகளைச் செய்ய முடியாது. ஆனால் அவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் எவ்வாறு சட்ட ஆலோசனைகளைப் பெற முடியும் என்பதையும், அவர்கள் இது தொடர்பாக யாரை அணுக வேண்டும், மேற்கொண்டு என்ன செய்ய முடியும் என்பன தொடர்பாகவும் நாம் அவர்களுக்கு ஆலோசனைகளை வழங்குவோம்.

குடாநாட்டில் வை.எம்.சி.ஏ. அலுவலகங்கள் ஆறு இயங்குகின்றன. அவற்றின் ஊடாக பொதுமக்கள் மத்தியில் மனித உரிமை தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடத்தவும் திட்டமிட்டுள்ளோம்.

முதற்கட்டமாக எமது அமைப்பின இளைஞர்களுக்கு மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்குகளை நடத்துவோம். பின்னர் அவர்களின் ஊடாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவோம்.

எமது பிரிவு கடந்த 15ஆம் திகதி தொடக்கம் கச்சேரிக்கு முன்பாக உள்ள வை.எம்.சி.ஏ. கட்டடத் தொகுதியில் இயங்க ஆரம்பித்துள்ளது.

இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு - 9 மாத காலப் பகுதிக்கு - வை.எம்.சி.ஏ.யின் தேசிய சபை நிதி ஒதுக்கீடு செய்து தந்துள்ளது. எமது செயற்பாட்டைப் பொறுத்து இந்தத் திட்டம் மேலும் நீடிக்கப்படலாம்.

எதிர்காலத்தில் குடாநாட்டில் நிகழும் மனித உரிமை மீறல்களை அதனால் பாதிக்கப்பட்டவர்களின் நிலைமைகளைப் பதிவு செய்து சர்வதேச ரீதியில், வெளிப்படுத்தவும் -

இதன்மூலம் இத்தகைய மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறாமல் தடுக்கவும் -

முயற்சி செய்வோம் இதற்கு எமது மக்களின் ஆதரவு அவசியம் - என்றார். (ம-6)

# சந்திரிகா நிதிஅமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும்

## ஐ.தே.க. பேச்சாளர் வற்புறுத்து

கொழும்பு,ஓக.25

பல்வேறு குற்றங்கள் புரிந்ததாகக் கூறி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கவுக்கு ஜனாதிபதி எழுதியுள்ள கடிதம் உண்மையானால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிதிஅமைச்சர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்யவேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐதேகவின் பேச்சாளர் கருணாசேன கொடித்துவக்கு கடந்த புதனன்று அவர் விடுத்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

எந்த அமைச்சினது செயற்பாட்டு விடயத்திலும் நிதிஅமைச்சுக்கு விசேட பொறுப்பு உண்டு. ஆகவே அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பைப் போன்று, அமைச்சுக்களின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதிக்கு விசேட பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமைச்சர் எஸ்பி. திஸநாயக்கவுக்கு அனுப்பிய கடிதத்தை நோககும் போது ஜனாதிபதி அந்தப் பொறுப்பை நிறைவேற்ற முடியாதவராக உள்ளார் என்பது தெளிவாகிறது.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் அமைச்சர் திஸநாயக்கவுடன் கொண்டுள்ள முரண்பாடுகளின் பிரதிபலிப்பாகவே ஜனாதிபதி அமைச்சரின் செயற்பாடுகளைக் கடும் விமர்சனத்துக்கு உள்ளாக்கியிருக்கிறார்.

அமைச்சரின் நடவடிக்கைகளை ஆராய்ந்து பார்த்தால் கடந்த வருடம இவரைப் பிரதி நிதிஅமைச்சராக ஜனாதிபதி நியமிக்கும் போது இவை குறித்து அறிந்திருக்கவில்லையா?

தனது இயலாமையை மூடி மறைக்க மற்றைய அமைச்சர்கள் மீதும் அதிகாரிகள் மீதும் குற்றங்களைச் சுமத்த ஜனாதிபதி முனைகிறார்.

தனது பொறுப்பிலிருந்து தப்புவதற்கு ஜனாதிபதிக்கு இந்தத் தடவை அவகாசம் கிடைக்காது. அதனால், குறைந்தது நிதிஅமைச்சர் பதவியிலிருந்தாவது அவர் இராஜினாமாச் செய்யவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# ஜனாதிபதி மீதான நம்பிக்கையை இழந்துள்ள அமைச்சர்கள்!

கொழும்பு,ஓக.25

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணை ஒன்று அமைச்சரவையில் கடந்த புதனன்று கொண்டுவரப்பட்ட சமயம் அதை பெரும்பாலான அமைச்சர்கள் நிராகரித்தனர் என கொழும்புப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்துக்கு முன்பாக - ஜனாதிபதி வருவதற்கு முன்பாக - பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் டி.எம்.ஜயரத்ன ஜனாதிபதிக்கு நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணை ஒன்றை வழிமொழிந்தார் என்றும் -

அந்தப் பிரேரணையை அமைச்சர்கள் எவரும் ஆதரித்துப் பேச முன்வரவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் இந்திக குணவர்த்தன மட்டும்தான் தனது கட்சியுடன் ஆராய்ந்த பின்னரே பிரேரணைக்கு ஆதரவு வழங்குவது பற்றித் தெரிவிக்க முடியும் என்று கூறினார்.

இவர் உரையாற்றி முடிக்கும் தறுவாயில், ஜனாதிபதி அங்கு வந்தார். அதன் பின்னர் இந்த விடயம் குறித்து எவரும் பேசவில்லை என்று கூறப்பட்டது.

இந்த விடயங்களை சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் உறுதி செய்த போதும் -

திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதம் கையளித்த அமைச்சர் ஒருவர், இந்திக குணவர்த்தனாவைத் தவிர ஏனையோர் பிரேரணையை ஆதரித்தனர் என்று கூறினார். (க-3)

# வியத்தில் காயம்

யாழ்ப்பாணம்,ஓக.25

இருட்டுவேளை வெளிச்சமின்றி வந்த மோட்டார் சைக்கிளும், சைக்கிளும ஒன்றுடன் ஒன்று மோதுண்டு ஏற்பட்ட விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

உடுவில் டச்சு வீதியில் கடந்த புதன் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் சைக்கிளில் சென்றவரான, உடுவிலைச் சேர்ந்த கந்தையா வல்லிபுரம் (வயது55) என்பவரே படுகாயமடைந்தார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-15)

# மடுவுக்குச் சென்ற இளைஞரைக் காணவில்லை

வவுனியா,ஓக.25

வவுனியாவில் இருந்து மடுவுக்குச் சென்ற இளைஞர் ஒருவரைக் காணவில்லை என்று அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் வவுனியா அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, பொன்னாவரங்குளத்தைச் சேர்ந்த மகாலிங்கம் கேதீஸ்வரன் (வயது18) என்ற இந்த இளைஞர் கடந்த 12ஆம் திகதி தொடக்கம காணாமற் போய்விட்டார் என்று அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

# பசுக்களை பாதுகாப்பதற்கான கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.25

பசுக்களைப் பாதுகாப்பதற்கான மகஜர் கையளிப்பு மற்றும் ஏனைய வேலைத்திட்டங்கள் தொடர்பான கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லை ஆதீனத்தில் இடம்பெறவுள்ளது. (ம-10)

# நெடுந்தீவு சாகித்திய விழா போட்டிகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஓக.25

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையினால் சாகித்திய விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

கவிதை, கட்டுரை, ஓவியம், சிறுகதை, நாடகம், கிராமிய நடனம், குழு இசை ஆகிய போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விவரம் முறையே வருமாறு:-

*கவிதை*

ஏ.சச்சிதானந்தம், த.மதியழகன், கோ.பத்மநாதன் (மூவரும் ஐக்கிய தீப கலைகலாசாரக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்)

*கட்டுரை*

ஏ.சச்சிதானந்தம்(ஐக்கிய தீப கலை கலாசாரக் கழகம்), கோ.பகீதரன் (ஐக்கிய தீப கலைகலாசாரக் கழகம்) யோ.அகாய் (நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை).

*ஓவியம்*

அ.சரத்குமார்(நெடுந்தீவு ம.வி.), ந.திலீபன்(நெடுந்தீவு ம.வி), ப.கேதீஸ்வரன்(ஐக்கிய தீப கலைகலாசாரக் கழகம்). ஓவியப் போட்டியில் சிறப்புப் பரிசை ஓய்வுபெற்ற கிராம அலுவலர் ப.பசுபதி பெறுகின்றார்.

*சிறுகதை*

கோ.பத்மநாதன்(ஐக்கிய தீப கலைகலாசாரக் கழகம்), நோ.அன்ரனீஸ்(சென். அன்ரனீஸ் ச.ச. நிலையம்), பி.ஓஸ்ரின் வர்சலா (நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி).

*கிராமிய நடனம்*

நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலயம், நெடுந்தீவு மகா வித்தியாலயம்.

*நாடகம்*

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்.

*குழு இசை*

நெடுந்தீவு மகா வித்தியாலயம்.

நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறைப் பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகத்தின் வழிப்படுத்தலில் நெடுந்தீவுக்கான கலாசார உத்தியோகத்தர் இந்தப் போட்டிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். (க-7)

# வாசகர் திருமுகம்

## அரசின் நிதியா? கட்சியின் நிதியா?

புனரமைப்பு நிதி நாடாளுமன்றத்தால் ஒதுக்கப்படுகிறது. சர்வதேச நிதி நிறுவனங்களும் இதற்கு பங்களிப்பு வழங்குவது வழமை. இந்நிதி கட்சிகளினது தனிப்பட்ட நிதியல்ல. யாழ்.மாவட்ட மக்களுக்கு பொதுவாக ஒதுக்கப்பட்டு செலவு செய்யும் பொறுப்பு மட்டுமே புனர்வாழ்வு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதனை தமது சொந்த நிதியாகப் பிரசாரப்படுத்தி மாலை இடுபவர்களுக்கும், பாராட்டுபவர்களுக்கும் ஒதுக்கீடு செய்வது துஷ்பிரயோகமானதாகும். ஏனைய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் நிதியைக் கையாடி 'தெருத் தேங்காயை வழிப் பிள்ளையாருக்கு உடைக்கும் செயலை'ச் செய்ய வேண்டாம் என அமைச்சரைப் பணிவாக வேண்டுகிறேன்.

யாழ். மாநகர சபை மக்களும், வடமராட்சி, தென்மராட்சி மக்களும் நிதி ஒதுக்கீட்டில் புறக்கணிக்கப்பட்டு மானிப்பாய், வட்டுக்கோட்டை, தீவகம முன்னுரிமைப்படுத்தப்படுவது எதனால்? இம் மக்களின் வாக்கு களை எதிர்வரும் தேர்தலில் பெற்றுக்கொள்ளமுடியாது போய்விடும் எண்ணமா? தெரியவில்லை.

யாழ்.மாவட்ட ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் நிதியை அவர்களிடம் ஒப்படைத்தால் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி பரவலாக மாவட்டத்தின் சகல பகுதிகளையும் சென்றடைய சந்தர்ப்பம் உண்டல்லவா?

அரச அதிபர், உதவி அரச அதிபர் காரியாலயங்களினூடாக திட்டமிட்டு ஒதுக்கீடுகளை முன்னுரிமை அடிப்படையில் செய்வதால் ஊழல்கள தடுக்கப்படுமல்லவா? எல்லாக் காரியாலயங்களின் பணிகளும் கட்சியால் தத்து எடுக்கப்பட்டுவிட்டதா?

கோயில்களுக்கு வர்ணம் தீட்டுவதுதான் அபிவிருத்தி எனக் கருதுகிறீர்களா? தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்திலே,

☆ தொலைபேசிக்கு விண்ணப்பித்த எல்லோருக்கும் இணைப்பு அளிக்க நிதி ஒதுக்குவதாக குறிப்பிட்டிருந்தீர்கள்?

☆ 24 மணிநேர மின்சாரம் வழங்க நிதி ஒதுக்குவதாக குறிப்பிட்டிருந்தீர்கள்.

☆ ஒரேயொரு யாழ்.போதனா வைத்தியசாலையை மேம்படுத்தி கொழும்பு வைத்தியசாலைகளின் தரத்துக்குக் கொண்டு வருவதாக உறுதி கூறியிருந்தீர்கள்.

☆ பல்கலைக்கழகத்தின் புனரமைப்பு, மேம்பாட்டைப் பற்றித் தெரிவித்திருந்தீர்கள்.

☆ அதிக வேலைவாய்ப்பைத் தரும் தொழிற்பேட்டை பற்றி குறிப்பிட்டிருந்தீர்கள்.

☆ அழிவடைந்த வீடுகள், கட்டடங்களுக்கு முழு நஷ்டஈடு பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள்.

ஆனால் தற்போதைய நிதி ஒதுக்கீடுகள் இவை எவற்றையும் கருத்தில் கொள்ளாது எந்த திட்டமிடல் குழுக்களையும் அமைக்காது வீண்விரயம் செய்யப்படுகிறது. கேள்விப்பத்திர முறை கடைப்பிடிக்கப்படவில்லை. இதனால் எதிர்காலத்தில் யாழ். மாவட்டத்துக்கு சர்வதேச நிதி நிறுவனங்களின் உதவிகள் கிட்டாது போகலாம். இவற்றுக்குப் பொறுப்பான அமைச்சர் பதிலளிப்பாரா?

*தாவடி.* **க.குமார்.**

## 'மின்கம்பங்களாக' மாறியுள்ள வீதியோர தென்னைகள், பனைகள்...!

இளவாலை - பண்டத்தரிப்பு ஆகியவற்றுக்கு இடைப்பட்ட பிரதான வீதி, பலதரப்பட்ட மக்களின் மிக முக்கிய ஒரே போக்குவரத்துச்சாலை. இச்சாலையினூடே மின்சார கம்பிகள் ஊடறுத்துச் செல்கின்றன. இதில் வேடிக்கை என்னவென்றால், வீதியோரக் காணிகளில், வளவுகளில் உள்ள பனைகளும், தென்னைகளும்தான் மின்கம்பங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இதனூடே செல்லும் 24 மணிநேர மின்சாரத்தினால் பொதுமக்களுக்குப் பாதிப்புக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் நிறையவே உள்ளன. இந்த மின்சாரம்கூட சட்டவிரோதமாகவே கொண்டு செல்லப்படுகின்றது.

சட்டவிரோத மின்விநியோகங்களைத் துண்டிக்கவென கண்கொத்திப் பாம்பாகத் திரியும் மின்சார சபையினரின் கண்களுக்கு இவை புலப்படவில்லையா? அல்லது அதிகாரத்தில் உள்ளவர்கள் செய்கிறார்கள் என்பதால் கண்டும் காணாததும் போல் உள்ளனரா?

இவற்றினால் பாதிக்கப்படுவது பொதுமக்கள் மட்டும்தானே..! இந்த வகையில் இதைத் தடுப்பதற்கு மின்சார சபையினர் என்ன செய்யப் போகின்றனர். மின்சாரத்தை துண்டிக்கப்போகின்றனரா? அல்லது அதிகாரத்தில் உள்ளவர்களுக்காக.. மின்கம்பங்களை நிறுத்தி பாதுகாப்பான முறையில் மின்சாரப் பாதையை அமைக்கப்போகின்றனரா?

விரைவான பதிலை மின்சாரசபை தருமா?

*இளவாலை.* **முகுந்தன்.**

## கைகளைத் தூக்கினால் ஆபத்தில்லை.....!

சமீபகாலத்தில் வடமராட்சி மக்களை ஈர்த்த விடயம் பூலான்தேவி சுட்டுக் கொல்லப்பட்டதோ அன்றி இலங்கையின் சர்வஜன வாக்கெடுப்பு அறிவிப்போ அல்ல. அது வேறொன்றுமில்லை, "பீல்ட் பைக் குறூப்"என அழைக்கப்படும் மோட்டார் சைக்கிள் குழு புரியும் செயற்பாடுகளே. இவற்றினால் மக்கள் வெறுப்படைந்துள்ளனர்.

வீதி நெரிசல் உள்ள நகரப் பகுதிகளில் ஒற்றைச் சில்லில் மோட்டார் சைக்கிளை ஓடி மக்களைக் கிலிகொள்ளச் செய்து வீதி ஒழுங்குகளைப் புறக்கணித்து தமது பயிற்சித் திறனை வெளிப்படுத்த வேண்டுமானால் அவர்கள் தமது பயிற்சித் திறனை திறந்தவெளிகளில் மேற்கொள்ளட்டும். இதற்கு யாராவது கைதட்டுவார்கள்.

ஆனால் இவர்கள் இதைவிடுத்து மக்களைக் கெட்ட வார்த்தைகளால் திட்டுகின்றனர். பிளேட்டினால் மக்களின் கைகளைக் கீறுகின்றனர். படலைகளைத் திறந்து உள்ளே நுழைந்து வீட்டைச் சுற்றி மோட்டார் சைக்கிளில் ஓடுகின்றனர். கூட்டமாக நிற்கும் இளைஞர்களை அடித்து உதைக்கின்றனர்.

இவ்வாறு பல மனித உரிமை மீறல்களை அவர்கள் மேற்கொள்கின்றனர். சுற்றிவளைப்புக்கள், மூலைக்குமூலை காவலரண்கள் மத்தியில் வாழும் மக்களுக்கு இந்தக்குழு புரியும் செயல்கள் ஆத்திரத்தையே உண்டாக்குகின்றன. இப்படியான செயற்பாடுகளினால் மக்களின் மனதை ஒருபோதும் வெல்ல முடியாது.

திறந்தவெளிச் சிறைச்சாலையில் வாழ்கின்றோம் என்ற உணர்வையே இவை இன்னும் ஏற்படுத்தும். படையினர் மக்களின் பாதுகாப்புக்காகவே இவற்றைச் செய்வதாகச் சொல்லலாம். மனித உரிமைகளை மீறி, மனித கௌரவங்களுக்கு மதிப்பளிக்காத "மக்கள் பாதுகாப்பு" எமக்குத் தேவையில்லை. அவசரகாலச் சட்டம் காலாவதியான போதும் யாழ்ப்பாணத்தில் மட்டும் இந்த அதிகாரத்தை இவர்களுக்கு யார் வழங்கியது என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

30-07-2001 அன்று பருத்தித்துறையில் தாங்கள் அருகில் வந்ததும் கையைத் தூக்கவில்லை என்பதற்காக ஒரு வர்த்தகரின் மகனின் வயிற்றுக்கு பல குத்துக்கள் கிடைத்தன. அவர் அண்மையில்தான் வயிற்றில் சத்திரசிகிச்சை செய்திருந்தார்.

நாடாளுமன்றத்தில் கைகளைத் தூக்கினோம். கோயில் கும்பிடுவதற்கு கைகளைத் தூக்கினோம். இப்போது அகதிகளாக நின்று இவர்களுக்கு கைகளைத் தூக்குகின்றோம்.

*பருத்தித்துறை* **ச.விஜயன்**

# சின்னஞ்சிறு விளம்பரம்

## DISSERTATION TYPE SETTING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் ஆங்கிலக் கட்டுரைகள், தட்டச்சு வேலைகள் செய்து Binding செய்து கொடுக்கப்படும். பிள்ளையார், 676, பருத்தித்துறை வீதி, நல்லூர். (91376)

## இறைச்சிக் கோழிகள் விற்பனை

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து(பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19,முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (91397)

புறொயிலர், கல்பேட்ஸ் இறைச்சிக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. **1 Kg 150/-** சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- றாஜீவ், ஆனைக்கோட்டைச்சந்தி, **T.P. 3529, 2867.** (91413)

இறைச்சிக்கோழி **(BROILERS)** விற்பனைக்கு உண்டு. **1 Kg 150/-** தொடர்பு:இல.94, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. (சட்டநாதர் சிவன் கோயிலுக்கும் கல்வியங்காடு சந்தைக்குமிடையில்) (91464)

புறொயிலர், கல்பேட்ஸ் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும் **1 Kg 150/-** தொடர்பு: இல.40 கோயில் வீதி, யாழ்ப்பாணம். (91543)

## மணமகன் தேவை

அரச வங்கியில் எழுதுவினைஞராகப் பணிபுரியும் 27 வயது - ரேவதி 2ஆம் பாதம் மணமகளுக்கு அரச சேவையில் எழுதுவினைஞர், பட்டதாரி அல்லது ஆசிரியராகப் பணிபுரியும் மணமகன் தேவை. விளம்பர இல.1355, மே/பா. உதயன். (91481)

## வீடு வாடகைக்கு

சுண்டுக்குளியில் பிரபல பாடசாலைகள், தேவாலயங்கள், பிரதேச செயலகம் ஆகியவற்றிற்கு அண்மையில் வீடு வாடகைக்குண்டு. தொடர்பு:- திரு.ப.நவரத்தினம் (ஜெயம்), இல.206, குருசோ வீதி, சுண்டுக்குளி. (91522)

## லவ்பேட்ஸ் விற்பனைக்கு

லவ்பேட்ஸ் குருவிகள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் பார்வையிடலாம். தொடர்பு:பி.திலீபன், மூணாமலை ஒழுங்கை, சுதுமலை அம்மன கோயிலடி, சுதுமலை. (91476)

## தவறிவிட்டது

**90/18F** சைத்திய றோட், தெலங்கப்பாத்த, வத்தளை என்னும் முகவரியைக் கொண்ட கெங்காதரன் லோகேஸ் ஆகிய எனது தே.அ. அட்டை (இல.831062223V) சுன்னாகம் சந்திக்கும் பருத்திக்கலட்டிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் திருமதி எஸ்.தவராஜா, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகத்தில் ஒப்படைத்துதவவும். (91532)

கலவத்தை லேன், காங்கேசன்துறையைச் சேர்ந்த ஸ்ரீகௌரி வடிவேற்கரசு என்பவருடைய வி.அ.அ. (இல. 090702296l) கோண்டாவில் பகுதியில் தவறிவிட்டது.கண்டெடுத்தவர்கள் மாயவன் போட்டோ பிரதிநிலையம், யாழ்பல்கலைக்கழகம் முன்பாக எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (91518)

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த மோட்சலிங்கம் சுமதி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 757762820V) நல்லூர் உற்சவத்தின் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்.ஆஸ்பத்திரி தாதியர் பயிற்சிப் பாடசாலையில் **(N.T.S)** கொடுத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (91530)

## விற்பனைக்கு

கலப்பின கோழிக்குஞ்சுகள், தாராக்குஞ்சுகள், நல்லின அடை முட்டைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.ஜெகன், இல.118, பலாலி வீதி, திருநெல்வேலி. (91505)

ஒருகைப் பாவனையில் உள்ள கார் (8 **SRI** 5175 வொக்ஸ்வகன்) விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.40/18, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (91510)

மீன்களுடன் கூடிய அழகான பெரிய மீன்தொட்டியும், குளிர்சாதனப்பெட்டியும் **(SINGER)** பெரியது (நல்ல நிலையில் உள்ளது) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மாருதி (அக்கூறியம்) இல.151, அரசடி வீதி, கந்தர்மடச்சந்தி, யாழ்ப்பாணம். (91497)

நல்லநிலையிலுள்ள லான்ட் மாஸ்ரர் பெட்டி, சைனா165F மொடல் எஞ்சின் நீர் இறைக்கும் இயந்திரம் (இந்தியன் இங்கிலன்ட்) மொடல் 12 என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: இ.பாஸ்கரன், 21, சட்டநாதர் வீதி, நல்லூர். (91539)

நல்ல நிலையிலுள்ள **CD** 90 (பென்லி பற்றி மொடல்) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ரவி மெக்கானிக், ஐயனார் கோயிலடி, கொக்குவில் மேற்கு. (91546)

## O/L MATHS

புதிய, பழைய திட்டத்திற்கமைய ஆரம்பஅறிவே இல்லாதவர்களுக்கும் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 36 வருட அனுபவம் உடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் DISTINCTION பெறுபேறடையக் கற்பிக்கப்படும். க.ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (91427)

## புறோயிலர் விற்பனைக்கு

இறைச்சிக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் வேண்டிய நிறையில், தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம் **(1Kg -140/=)** 40, விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு. (கல்வியங்காட்டுச் சந்தைக்கு அருகில்) (91537)

இறைச்சிக்கோழி புறோயிலர் **(BROILER),** சேவல், கல்பேட் என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் தேவையான நிறையில் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். 68, **OLD PARK ROAD, JAFFNA** (91536)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூ.350/-) தொடர்பு: பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 3081. (C/17642)

## சித்திரம்

A/L 2002, 2003 பிரிவினருக்கு சித்திரம் கற்பிக்கப்படும். (பாடத்திட்டம் முழுமையாக்கப்படும்) இல.76, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம். (91487)

## திருமண சேவை

1966ஆம் ஆண்டு சதய நட்சத்திரம் செவ்வாய்க் குற்றமுள்ள கனடாவிலிருந்து (சிற்றிசன்) வந்துநிற்கும் மணமகனுக்குப் பொருத்தமான மணப்பெண் தேவை. திருமணம் செய்து அழைத்துச்செல்வார். துர்க்கா திருமணசேவை, 178, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (91533)

## கலை நிலா அரங்கம்

யாழ்ப்பாணம்,ஓக.25

யாழ்திருமறைக் கலாமன்றம் நடத்தும் மாதாந்த கலை நிலா அரங்க நிகழ்ச்சிகள் இன்று சனிக்கிழமை மாலை 6.45மணிக்கு மன்ற அரங்கில் நடைபெறவுள்ளன.

இன்றைய நிகழ்வில் நடனம், ஒயிலாட்டம், கவிதாஞ்சலி ஆகிய கலை நிகழ்வுகளுடன் சிறப்பு நிகழ்ச்சியாக 'சத்திய சோதனை' இசை நாடகமும மேடையேற்றப்படவுள்ளது. (ம-6-10)

## தத்து எடுக்க விரும்பின் விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி,ஓக.25

மந்திகை ஆஸ்பத்திரியில் பிரசவத்தின்பின் தாயாரால் கைவிடப்பட்ட 3 மாதப் பெண் குழந்தையைத் தத்து எடுக்க விரும்பும் தகுதியான தம்பதிகளை எழுத்துமூலம் விண்ணப்பிக்குமாறு மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை அறிவித்துள்ளார். (ம-117)

## சென்.ஜோன் அம்புலன்ஸ் 2001

### தேசிய பாசறையில் திருகோணமலை

*மாவட்டம் கூடிய கேடயங்களை சுவீகரித்தது!*



அண்மையில் காலியில் இடம்பெற்ற சென்.ஜோன் அம்புலன்ஸ் தேசிய பாசறை போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்று கேடயங்களைப் பெற்ற மாவட்டங்களின் விபரம்: 18வயதுக்கு மேல் மொரட்டுவா 2கேடயமும், மட்டக்களப்பு 1கேடயமும், திருகோணமலை 2கேடயமும் பெற்றது.

18வயதுக்குக் கீழ் கம்பக 1கேடயமும், மாரகமா 1கேடயமும், யாழ். மத்திய மாவட்டம் 1கேடயமும், திருகோணமலை மாவட்டம் 2கேடயமும் (திருகோணமலை மாவட்டம் எல்லாமாக 4கேடயமும் பெற்றது). மேற்குறிப்பிட்ட படத்தில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து பங்குபற்றிய அங்கத்தவர்கள் பெறப்பட்ட 4கேடயத்துடன் திருகோணமலை மாவட்ட ஆணையாளர் S.தேவசகாயம், உதவி ஆணையாளர்கள் T.F.ஜெயா, S.கலில், S.றபான், சங்கப்பணிப்பாளர் Dr.S.M.சமரகே, சபைத்தலைவர் M.R.பிறில்ஸ், சென்ஜோன் தளபதி Dr.J.G.ஜெயதிலக, தென்மாகாண ஆணையாளர் வில்சன்பத்திரண, யாழ்.தெற்கு மாவட்ட ஆணையாளர் S.செல்வரஞ்சன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

இங்கு வெற்றிக் கேடயங்களைச் சுவீகரித்த அனைவருக்கும் எங்களுடைய பாராட்டுக்கள்!

**மாவட்ட ஆணையாளர்,**
**உத்தியோகத்தர், அங்கத்தவர்,**
**சென்.ஜோன் அம்புலன்ஸ்,**
**யாழ்.தெற்குப் பிரதேசம்.**

யாழ்.தெற்கு
பிரதேச தலைமையகம்,
கொக்குவில்.

(C/17986)

---

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம் (வரையுள்ளது)

## கூறுவிலை கோரல்

எமது சங்க லொறி 48-1105 'பொடி' திருத்த வேலைகள் இடம்பெறவுள்ளதால் அதற்கான கூறுவிலைகள் எதிர்வரும் 29.08.2001 வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும். சங்கக் காரியாலயத்தில் நாளை (26.08.2001) ஞாயிற்றுக்கிழமை லொறியைப் பார்வையிடலாம்.

*நேரம்:* காலை 9.00 மணிமுதல் 4.30 மணிவரை.

*சாவகச்சேரி, ப.நோ.கூ.சங்கம்,*
*திருமகள் சோதி வீதி,*
*நெல்லியடி.*

- பொது முகாமையாளர்.

(C/17987)

---

## நான்காவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
27
-
11
-
1954



மறைவு
25
-
08
-
1997

### அமரர் அருட்திரு. இ.அருள்பாலன்

(தெ. இ. திருச்சபை ஊழியர்)

ஆண்டுகள் நான்காகினாலும்
துயரம் ஆறாகினாலும் உங்கள்
நினைவுகள் எம்மை விட்டகலாது!

இந்த வேளையிலும் நினைவுகூரும்:
அ.சத்தியா *(மனைவி)*

*இராமலிங்கம் வீதி,*
*உடுவில்.*

(91524)

---

## 31 ஆவது நினைவு நாள்

மண்ணக
வரவு
1915
-
08
-
17



விண்ணக
விரைவு
2001
-
07
-
26

### அமரர் தெட்சணாமூர்த்தி சிவமூர்த்தி

களிப்புடன் கைப்பிடித்து காலமெலாம் கண்ணிமைபோல்
காத்தீரையா,
கையையும் விட்டுவிட்டு கண்கலங்க சென்றதென்ன
காலனின் கூத்தா?

உங்கள் ஆத்ம ஜோதி
எங்கள் இதயக் கமலத்தில்
அனைவரதமும் ஒளிவளர் விளக்காய்
பிரகாசிக்க வேண்டி நிற்கும்

மனைவி: கமலபூரணம்
மற்றும் குடும்பத்தினர்.

*37, குமார வீதி,*
*நல்லூர்.*

(91503)

---

## ரங்கன் மாஸ்ரர் ஆட்ஸ் கராத்தே கழக

வளர்ச்சிக்காக நடைபெறும்

# மாபெரும் கராத்தே போட்டி



சிறப்பு விருந்தினராக
உயர்திரு.
**வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் J.P.U.M.**
*(வலி: தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர்)*
அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பார்.

*இடம்:-* யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி
*காலம்:-* நாளை (26-08-2001) ஞாயிற்றுக்கிழமை.
*மாலை 3.30 மணிக்கு நடைபெறும்.*

(91418)

# இந்த வார இராசி பலன்

## 26 - 8 - 2001 – 1 - 9 - 2001

| | | | |
|---|---|---|---|
| | | சனி | வி ரா |
| | இராசிச் சக்கரம் | | வெ |
| — | | | சூ▲ |
| செ கே | சந் | | புத |

### மாற்றம்

***26.8.2001 இல் அனுஷம் நட்ஷத்திரம்விருச்சிக இராசியில் சந்திரன் நிற்கும்.***

அரசியலில் ஒரு நிர்ப்பந்த நிலை — இந்த நாடு எமது தாய் நாடு என்ற தத்துவ நிலை தலைதூக்கும். தெற்கே அரசியல் வாதிகளிடையே கருத்து மோதல் உச்சக்கட்ட நிலைக்கு வரும் காலமாகும். யுத்தத்தின் கொடுமைகளை மக்கள் தாங்க முடியாமல் கொதிப்பு நிலை அடைவார்கள். பல வேலை நிறுத்தங்கள் - போராட்ட உணர்வுகள் தோன்ற இடம் உண்டு. அரசியல் தலைவர்களுக்கு நல்லதல்ல. இந்தியாவின் உதவி எங்களுக்குத் தேவை எனச் சிலர் கருத்துக் கொடுப்பர். இந்தியாவில் வடக்கில் தீவிர வாதிகளால் அழிவுகள் திட்டமிட்டு நடத்தப்பட இடமுண்டு. தெற்கே அரசியல் எதிர்ப்புணர்வு ஏற்படும். மேற்கு நாடுகளின் பொருளாதார வளங்கள் பல்கிப் பெருகும். மத்திய கிழக்கு, கிழக்கு நாடுகளின் பொருளாதார அழுத்த உணர்வு மேலோங்கும் நிலை ஏற்படும். பசுபிக் - இந்து சமுத்திரக் கடற்பிராந்தியங்களில் இயற்கையின் சீற்றம், காற்று மழை ரூபத்தில் இடம்பெற இடமுண்டு எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

வாழ்க்கையில் எவர்–எவரை நம்புவது; ஏன் மனிதரை மனிதர் ஏமாற்றுகின்றார்கள்— இலாபமில்லாவிடில் ஏமாற்றுவார்களா? தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்களால் பொருள் செலவு கட்டுமீறும். மாமன் வழியினர் குறைசொல்லுவார்கள். தாய்வழியினர்களுக்கு பாதிப்புவரும். கோயிலுக்குச் செல்லல், பொருள் செலவு செய்வீர்கள். இடமாற்றங்களைத் தவிர்த்து நடந்து வாருங்கள். நாலாம் இடத்து வெள்ளி இடாம்பீகப் பொருள்களை வீட்டிற்குக்கொண்டுவர எண்ணமிடும். பிரயாணத் துறை, செய்தித்துறை, சங்கீதத்துறை, மருந்துத்துறை போன்ற]துறைகளில் தொடர்பானவர்களுக்கு அதிக இலாபங்கள் வரும் காலமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:– திங்கள், புதன்.

### இடபம்

வீடுவளவு உறவு - சகோதர பாசம் எல்லாம்- கோட்டிற்கு ஏறியவுடன் பேரய் விடுவது இயற்கையாகும். தொழில் ஸ்தானத்தில் பொறுமையாகப் பொறுப்புடன் செயற்படுங்கள். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். சகோதரங்களுக்காக ஓடியாடித்திரிவீர்கள். எதிரிகளை வெல்லுவீர்கள். வாகனத்துறை- ஹோட்டல்துறை- வியாபாரத்துறை- கோவில்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் நல்ல இலாபம் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:– திங்கள், புதன்.

### மிதுனம்

முன்னால் கொடுக்கும் அறியும் விஷயங்களை, பின்னால் கொடுக்கும் லஞ்சத்தைப் பெறுபவர்கள் சிலரால் எவ்வளவு துன்பம் வருகின்றது. தொழில் ஸ்தானத்தில் இப்படியானவர்களின் செயலால் வருந்துவீர்கள். மேலதிகாரிகள் உதவுவார்கள். அவசர புத்தியால் இழப்புக்களைச் சந்திப்பீர்கள். எதிர்ப்பாலாருடன் அனுசரித்துப் போவீர்கள். பிரயாணங்களால் தொல்லைகள் ஏற்படும். அரசியல்துறை, விவசாயத்துறை, மருந்துத்துறை, நீதித்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்களும் இலாபங்களும் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன்.

### கடகம்

எல்லோரையும் விலைக்கு வாங்க முடியும் என நாம் எண்ண முடியாது என்ற உண்மையைச் சிலர் புரிந்து கொள்ளல் வேண்டும். அன்பால் சாதிக்க முடிந்தளவு காசுக்கு சக்தி இல்லை. எங்கே ஓடித்திரிகிறீர்கள். தொழில் ஸ்தானத்தில் பல பெரியவர்கள் உங்களைக் கவனித்தபடி இருக்கின்றார்கள். குடும்பத்தினருடன் கருத்து வேற்றுமை வர இடம் உண்டு. அரசியல் துறை, சட்டத்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்களுக்கு படிப்படியான நன்மைகளும் பொருள்வரவுகளும் கொடுக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:– திங்கள், புதன், வியாழன், சனி.

### சிங்கம்

பாசத்தால், நீ®, நியாயம் எனப்பாராட்ட முடியாது. ஆனால் சட்டம் அதை நியாயப்படுத்தும் என எதிர்பார்க்கலாம். உதயத்தில் ஆதவன் படபடப்பைக் கொடுப் ான் தொழில் ஸ்தானத்தில் குறை குற்றங்கள் காண்பார்கள். நிதானமாக இருக்கவும். கலகம் பிறந்தால் தானே நியாயம் பிறக்கும். பிரயாணம் மாற்றம் சகஜம். சக ஊழியருட.. கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான தாக்கம் ஏற்படலாம். சட்டத்துறை, மருந்துத்துறை, செய்தித்துறை, போக்குவரத்துத்துறை, குருத்துறை, நகை, புடைவைத்துறை போன்ற துறைகள் தொடர்பானவர்களுக்கு நன்மைகளும் மாற்றங்களும் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்கள் :– புதன், வியாழன், சனி.

### கன்னி

கலந்து மாறும் கலாசார உணர்வுகள், புதிய த்லை முறையை உருவாக்குவதில் எவ்வளவு போராட்ட உணர்வு ஏற்படும். என்ன கலகலப்பாக இருக்கின்றீர்கள். அதிக செலவுகள், ஆடம்பரச் செலவுகள் என்பன ஏற்பட இடம் உண்டு. தொழில் ஸ்தானத்தில் சொல்வாக்கு செல்வாக்குப் பெறும்'சகோதரர், பெற்றோர், இனஜனங்களின் உதவிகள் கிடைக்கும். ஆலயத்தொண்டு, வியாபாரத்துறை, விவசாயத்துறை, நீதித்துறை, ஆசிரியத்துறை, பத்திரிகைத்துறை, நகைவேலை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன்,சனி.

### துலாம்

பிரச்சினைகளை உருவாக்காமல் சமாளித்து நிர்வாகத்தை நடத்துவதே திறமையாகும். தொழில் ஸ்தானத்தில் பலவித அபிப்பிராய பேதங்கள், செயற்பாடுகளில் வரும் பொழுது உண்மைப் பாதைப்படி அமைதியாக இருந்து நடைமுறைப்படுத்துவீர்கள். புதிய பொறுப்புக்கள் கருத்து வேற்றுமைகளைக் கொடுக்கலாம். மாற்றங்கள் சகஜம். அட்டமத்துச் சனி மனக்கவலையைத் தர இடமுண்டு. எதிர்ப்பாலாரின் உதவிகள் கிடைக்கும். மாற்றங்களால் மன அமைதி ஏற்படும். வயிற்றில் இடைக்கிடை பிரச்சினை வந்து மருந்து எடுக்க வேண்டி வரலாம். சட்டத்துறை, நிர்வாகத்துறை, வியாபாரத்துறை, குருத்துறை, விவசாயத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன்,வியாழன்,சனி.

### விருச்சிகம்

ஏமாற்றக்காரர்களை ஏமாற்றுவது குற்றமா?, புத்தியை, யுக்தியைப் பிரயோகித்து சக்தியை வளர்த்து, நீதி நியாயப்படி, சட்ட திட்டப்படி நடந்து வெற்றி பெறுபவர்கள், உறுதியானவர்களாவார்கள். தொழில் ஸ்தானத்தில் ஏமாற்றங்கள், மேலதிகாரிகளின் கடும் வசனங்கள் மனதை வேதனைபடச் செய்யும், இடம்மாற்ற யோசனை வந்தாலும் பொறுமையாக இருப்பதுவே நன்று. அடைய முடியாத பொருள் மீது ஆசையும், அபிமானமும் வருவது இயற்கையே. பொருள் இழப்பு வரலாம். கவனமாக இருக்கவும். கணனித்துறை, இசைத்துறை,இரும்புத்துறை, நகைத் துறை போன்றவர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:– புதன்,வியாழன், சனி.

### தனுசு

இப்பொழுது அம்மா அப்பா, ஆசிரியர் கொஞ்சம் பொறுமையாக விலகியிருந்து இளம் சமுதாயத்தை மெல்ல மெல்ல வழிநடத்த முயல வேண்டும். அதேபோன்று தான் தொழில் ஸ்தானத்திலும் இளம் வயதினர் கொஞ்சம்முறுகுவார்கள். பொறுமையாகஇருக்கவும். எதிர்ப்பாலார்கள் குறை சொல்லுவார்கள். தூரதேசச் செய்திகள்மன ஆறுதலை கொடுக்கும் நகைத்தொழில், புடைவை, வியாபாரம், ஆசிரியத்துறை, வைத்தியத்துறை தொடர்பானவர்களுக்கு நற்பலன் — முன்னேற்றங்கள் ஏற்பட்டபடி இருக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், சனி.

### மகரம்

இருட்டில் நடக்கும் விடயங்களால் சிலர் சில்ரை ஏமாற்றலாம். ஆனால் பகலில் நடக்கும் பலவிஷயங்களுக்கு பலர் பதில் சொல்லியாக வேண்டிவரும் காலமாகும். தவறு இழைப்பது மட்டுமல்ல—தவறைத் திருத்தாமல் பார்த்துக் கொண்டிருப்பதுவும் குற்றமாகும். தொழில் ஸ்தானத்திலும் இவ்வாறு தவறுகளை மேலதிகாரிகளுக்குத் தெளிவு படுத்த வேண்டிவரும்! இடமாற்றம் சகஜம். பிரயாணத்துறை, குருத்துறை, பாதுகாப்புத் துறை போன்ற துறையினர்கள் நற்பலன் — மாற்றங்களை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:– திங்கள், வியாழன், சனி.

### கும்பம்

யாழ்ப்பாணத்தில் பிறந்த குகனேசனுக்கு பிரான்ஸில் பிறந்த றோசியாவைத் திருமணம்பேச அவரவர் குறிப்பை அவரவர் நாட்டில் வாக்கியப்படி அல்லது திருக்கணிதப்படி கணித்துப்பார்க்க வேண்டும். பிரான்ஸில் பிறந்தறோசியாவுக்கு யாழ்ப்பாண நேரமாக மாற்றி (பிரான்ஸ்நேரத்தை) எழுதிய குறிப்புப் பிழையானது. அதைப்பார்க்க முடியாது. எத்தனையோ பேர் பிழையாக வழிநடத்தப்படுகிறார்கள். அதனால் கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள். உங்கள் தொழில் ஸ்தானத்திலும் பிழைகளைக் கண்டும் காணதவர்களாக இருக்காதிர்கள். நியாத்தைத் தட்டிக் கேட்டு குறை கேட்டாலும் பரவாயில்லை எனச் சிந்திக்கிறீர்கள். தூரதேசச் செய்தி- இடமாற்றம், தொழில் ஸ்தானத்தில் வாக்குக் கலகம் வரலாம். குருத்துறை, பிரயாணத்துறை, சட்டத்துற்ற, கமிஷனர் வியாபாரத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்கள்;- திங்கள், வியாழன், சனி.

### மீனம்

திரிசங்கு சொர்க்கபூமியாகி விட்டது எமது நாடு. மக்கள் ஒன்று சேர்ந்து யுத்தத்தை நிறுத்த நீதியான குரல் எழுப்பி இளம் சந்ததியினரையும் எமது பூமியின் வளங்களையும் காப்பாற்ற வேண்டியகாலமாகும். தொழில் ஸ்தானத்தில் பக்குவமாகச் செயற்பட்டு மேலதிகாரிகளின் 'சபாஸை'ப் பெறுவீர்கள். இடமாற்றம் பிரயாணம் சாதகமாகும். பொருள் இழப்புவரலாம்.வாகனம்.கவனம்வியாபாரத்துறை, மருந்துத்துறை, குருத்துறை, பாதுகாப்புத்துறை போன்றதுறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், வியாழன், சனி.

**மகாதேவா ஜோதிடம்**

---

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 25

அளவெட்டி, பெருமாக் கடவை பிள்ளையார் ஆலயத்தின் புனருத்தாரண வேலைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு அருட்கவி. சீ. விநாசித்தம்பி தலைமையில் ஆலயமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ம-10)

## இணுவிலில் கோவா பயிர் மீது நோய்த் தாக்கம்

வலி.வடக்கு, ஓக. 25

இணுவில், கோண்டாவில், மருதனார்மடம் பகுதித் தோட்டங்களில் பயிரிடப் பட்டுள்ள முட்டைக்கோவா மீது நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

நூற்றுக்கணக்கான பரப்பில் இப் பகுதியில் முட்டைக் கோவா பயிரிடப்பட்டுள்ளது. இப் பயிர்களில் உள்ள இலைகள் யாவும் பூச்சியினால் துளையிடப்பட்டுக் காணப் படுகின்றன.

(ம-86


## முதலாம் ஆண்டு நினைவு தினம்



**செல்வன் பாலகிருஸ்ணன் ஜெயராஜ்**

(கண்ணன்)

அன்னையின் மென் மடியில் **25 - 01 - 1980**

ஆண்டவன் திருவடியில் **25 - 08 - 2000**

சிட்டாக நீ எம்மை
விட்டுப் பறந்து சென்று
இன்றோடு ஓராண்டாகிறது!
எம்மிடம் சோகத்தையும் கண்ணீரையும்
தந்துவிட்டு கைமாறாக
புன்னகையையும், நிம்மதியையும்
எடுத்துச் சென்று விட்டாய்—கண்ணில்
நிழலாடும் உன் உருவம்
நிஜமாக எம்முன் வருமா?
வருமா... கண்ணா?

பிரிவால் வாடும்:
**தாய், தந்தை, சகோதரர்கள்.**

இல. 10,
கேசாவில் பிள்ளையார் கோவில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(91425)

# நன்றி கூறி வாழ்த்துகின்றோம்

**அல்லைப்பிட்டி புனித பிலிப்பு நேரியார் ஆலய**

கட்டட புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்து எமக்கு உதவியமைக்காக,



மாண்புமிகு அமைச்சர்

**K.N.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்

யாழ்.மாவட்ட உறுப்பினர்

**உயர்திரு.**

**கே.வி.குகேந்திரன்**

**(ஜெகன்)**

அவர்களையும்





தீவுப்பகுதி அமைப்பாளர்

**திரு.ந.மதனராஜா**

**(மனோ)**

அவர்களையும்

வேலணைப் பிரதேச சபைத் தலைவர்

**கருணாகரகுருமூர்த்தி**

அவர்களையும்

*நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

*2ஆம் வட்டாரம்,* புனித பிலிப்பு நேரியார் ஆலய
*அல்லைப்பிட்டி.* (91541) பங்குத்தந்தையும், பங்குமக்களும்.

# 31 ஆவது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 08 | 24 |
| 11 | 07 |
| 1943 | 2001 |

## திருமதி
## யோகலிங்கம் மனோரஞ்சிதராணி

**எம் குலவிளக்கு அணைந்து விட்டது!**
**மெழுகுவர்த்தி கரைந்து விட்டது!!**
**தீயோடு சங்கமமாகிவிட்ட உங்கள்**
**திருஉடல் எங்கள் மனதில்**
**என்றுமே நீங்காதிருக்க இறைவனைத்**
**தொழுது இறைஞ்சுகின்றோம்!!!**

எமது தாயாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் பல்வேறு விதத்திலும் உதவிகள் புரிந்த எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபச்செய்திகள் அனுப்பியவர்களுக்கும் நாம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (25-08-2001) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**கணவன், மகள், மருமகன்.**

*ஏழாலை மேற்கு,*
*ஏழாலை.* (91534)

# மரண அறிவித்தல்

## அருட்சகோதரிகள் எம்மா மார்க்

(வங்காலை)

## ஹோட்டன்ஸ் அந்தோனிப்பிள்ளை

(இளவாலை)

திருக்குடும்பச் சபையைச் சேர்ந்த மேற்படி அருட்சகோதரிகள் இருவரும் முறையே மன்னார், இளவாலை ஆகிய இடங்களில் நேற்று (24.08.2001) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தனர்.

அவர்களின் நல்லடக்கம் இன்று (25.08.2001) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருப்பலி முடிவில் மன்னார், இளவாலை சேமக்காலைகளில் நல்லடக்கம் செய்யப்படும்.

உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இதனை அறியத்தருவதோடு, அவர்களின் ஆன்ம சாந்திக்காகவும் வேண்டும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
**அன்சிவா ஜேம்ஸ்**
மாகாணத் தலைவி.

மாகாண இல்லம்.
*121, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.* (91525)

## கணனிப் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்,ஓக.25

யாழ்ப்பாணம், கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கம் வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கணனிப் பயிற்சி வகுப்பு ஒன்றை நடத்தவுள்ளது.

ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலம், தமிழ், கணிதம் ஆகிய பாடங்களில் சித்தி அடைந்த 18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் -

விண்ணப்பிப்பவர்களில் ஜே/81, ஜே/82, ஜே/83, ஜே/84, ஜே/85, ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் வசிப்பவர்களுக்கு தெரிவில் முதலிடம் அளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## காணி அன்பளிப்பு

தென்மராட்சி,ஓக.25

புலோலி மேற்கு அறிவகம் சனசமூக நிலையத்திற்கு புதிய கட்டடம் அமைப்பதற்கான காணியை இப் பகுதியைச் சேர்ந்த நால்வர் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

இதே இடத்தைச் சேர்ந்த எஸ். அதிர்ஷ்டம், சி.தனபாலசிங்கம், ந.திரவியம், ச.தம்பிமுத்து ஆகியோரே காணியினை அன்பளிப்புச் செய்தவர்களாவர்.

இந்தக் காணியில் ஐந்து லட்சம் ரூபா செலவில் சனசமூக நிலையத்திற்கு புதிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் -

இதற்கான நிதியினை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு அண்மையில் வழங்கியதாகவும் -

தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## ஆலயத்துக்கு தொலைபேசி

காரைநகர்,ஓக.25

காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு கடந்த புதன்கிழமை தொடக்கம் தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தொலைபேசி இணைப்பினை வழங்குவதற்கு யாழ்.மகாலட்சுமி ஸ்ரோர்ஸ் நிறுவனத்தினர் அனுசரணை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

மேற்படி ஆலயத்தில் 12 இலட்சம் ரூபா செலவில் புதிய தேர்முட்டி அமைக்கப்பட்டு அம்பாளுக்குப் புதிய சித்திரத்தேர் அமைக்கும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ம-73)

## தொண்டமனாறில் புதிய பஸ்தரிப்பிடம் அமைப்பு

சுமார் மூன்றரை லட்சம் ரூபா செலவில் தொண்டமனாறு சந்நிதியில் புதிய பஸ் தரிப்பிடம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதியை வல்வெட்டித்துறை நகர சபை ஒதுக்கி உள்ளது. அமைக்கப்படவிருக்கும், புதிய பஸ் தரிப்பிடத்துக்கு, பாக்கு நீரிணையை முதன் முதலில் நீந்திக் கடந்த சாதனையாளன் அமரர் நவரத்தினசாமியின் பெயர் பொறிக்கப்படும் என வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (ம-109)

## வெளிமாவட்டத்தில் உள்ளோருக்கு திங்கள் நேர்முகப் பரீட்சை

யாழ்மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் தற்போது நடைபெற்றுவரும் தமிழ்மொழி மூலப் பாடசாலைகளுக்கான தகுதிகாண் ஆசிரியர் நியமன நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட வலயங்களில் தோற்றமுடியாமல் வெளிமாவட்டங்களில் தங்கி நிற்போர் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை திருகோணமலையிலுள்ள கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சில் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றமுடியும் என வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் அறிவித்துள்ளார். (ம-51)

## தேவை

எமது ஸ்ருடியோவுக்கு உட்புற, வெளிப்புற, படப்பிடிப்பாளர்கள், பயிற்சியாளர்கள் இருபாலாரும் தேவை. (91538)

*தொடர்பு:*
*யாழ்.தேவா ஸ்ருடியோ*
71,**K.K.S.** வீதி, சுன்னாகம்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 29 | 04 |
| 12 | 09 |
| 1969 | 2000 |

## அமரர் வல்லிபுரம் ஜெயராணி

திதி: 25-08-2001

ஆண்டுகள் பல சென்றாலும்
அழியாத கோலமாய் என்றென்றும்
எங்கள் நெஞ்சங்களில் நிலைத்து
நிற்கும் அன்புச் செல்வியே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*காந்தியூர்,*
*புலோலி வடமேற்கு,*
*புலோலி.* (C/17989)

அம்மா, சகோதரர்கள்,
ஜெகநாதன், குமார், அண்ணி.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
| --- | --- |
| 04 | 26 |
| 08 | 07 |
| 1924 | 2001 |

## அமரர் விநாசித்தம்பி பாலசுந்தரம்

(ஓய்வுபெற்ற கிராமசேவையாளர், பருத்தித்துறை)

எங்கள் வீடுவிளக்காய் ஞானஉப தேசிகனாய்
தூங்கமிகு தூமணியாய் எஞ்ஞான்றும் - எங்களுடன்
ஒன்றி யுவந்திருந்த கோமானை யெண்ணுங்கால்
கன்றி யுருகு முளம்

*அம்பன்,*
*குடத்தனை.* (C-17990)

மனைவி, தங்கை, மைத்துனர்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## நன்றி நவிலலும்
## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



| அன்னை மடியில் | ஆண்டவன் அரவணைப்பில் |
| --- | --- |
| 17 | 26 |
| 06 | 07 |
| 1927 | 2001 |

## திருமதி இராசமணி நவரத்தினம்

**எம்மைத் தவிக்க விட்டுச்சென்ற தாயே!**
**நேற்றுவரை பக்கத்தில் இருந்த உங்களை**
**இன்றோடு எம் இதயத்தில் இருத்தி விட்டு நாம்**
**இருளில் தத்தளிக்கின்றோம் - உங்கள்**
**நினைவுகள் என்றும் எங்கள்**
**நெஞ்சங்களில் நின்று நிழலாடும்.**

எங்கள் அன்புத் தாயாரின் மறைவுச்செய்தி கேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

இன்று (25.08.2001) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*பரராசசேகரப் பிள்ளையார் கோயிலடி,*
*இணுவில் தெற்கு,*
*இணுவில்.* (91535)

### செப்.1 முதல் கருத்தரங்கு

வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு நடத்தவுள்ள சிறுபணியாளர்களை எழுதுநர் தரம் II "ஆ" பிரிவுக்குத் தரம் உயர்த்துவது தொடர்பான பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்குகளை நடத்த யாழ் மாவட்ட சிறு பணியாளர் சங்கம் ஒழுங்குகளைச் செய்துள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் இந்தக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன என்று சங்கத்தின் செயலாளர் எஸ்.புவனேந்திரன் அறிவித்துள்ளார். (ம-7)

## மென்பந்து துடுப்பாட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.25

யாழ்.பிராந்திய மக்கள் வங்கி விளையாட்டுக்கழகம் வங்கியின் 40 ஆவது நிறைவு விழாவையொட்டி மென்பந்து துடுப்பாட்டப் போட்டிகளை இன்று முதல் நடத்தவிருக்கின்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்றும் நாளையும் வங்கிகளுக்கிடையில் நடக்கும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★இன்று காலை 10மணிக்கு - தேசிய சேமிப்பு வங்கி எதிர் இலங்கை வங்கி.

★பிற்பகல் 2மணி - மக்கள் வங்கி எதிர் ஹற்றன் நஷனல் வங்கி.

★நாளை காலை 10மணி - மக்கள் வங்கி எதிர் வர்த்தக வங்கி.

★பிற்பகல் 2மணி - ஹற்றன் நஷனல் வங்கி எதிர் தேசிய சேமிப்பு வங்கி.

★யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்றும் நாளையும் வங்கி, அரச, கூட்டுறவு, கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கு இடையில் நடக்கும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★இன்று காலை 9மணி - யாழ். மாநகரசபை எதிர் யாழ்.போதனா வைத்தியசாலை.

★பிற்பகல் 12.30மணி - யாழ்கல்வி வலயம் எதிர் ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை.

★பிற்பகல் 3மணி - யாழ்செயலகம் எதிர் புனித பத்திரிசியார் கல்லூரி ஊழியர் அணி. (சு-3)




பொன்விழா நாயகன்
திரு.நா.வன்னியசிங்கம்
(அதிபர், வைத்தீஸ்வராக் கல்லூரி)
அவர்களை
வாழ்த்துகின்றோம்

தயா அச்சகம்
கொம்பியூட்டர், ஓவ்செற், றோணியோ
(91544)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 • 10 • 1922



மறைவு 03 • 09 • 2000

### அமரர் வேலுப்பிள்ளை செல்லத்துரை

(முறிவு, நெரிவு வைத்தியம் - புலோலி)

அன்னாரது நினைவு தினத்தை முன்னிட்டு, இன்று 25. 08. 2001ஆம் திகதி, தென் புலோலி ஸ்ரீ முதலி அம்பாள் ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெறவிருக்கும் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சந்தா தோட்டம்,*
*புலோலி கிழக்கு,*
*புலோலி.* (91565) - குடும்பத்தினர்.


ஜனனி நகைமாடம்

எமது ஸ்தாபனத்தின்
புதிய கிளை ஸ்தாபனத்தினை
மத்திய மகாவித்தியாலய வீதி, நெல்லியடி
என்னும் முகவரியில் புதிதாக ஆரம்பித்துள்ளோம்
என்பதை
எமது வாடிக்கையாளர்களுக்கு
தெரிவித்துக்கொள்கின்றோம்.



அழகிற் சிறந்த
தங்க நகைகளுக்கு
சிறந்த இடம்.
ஓடர் நகைகள்
உத்தரவாதத்துடன் செய்துகொடுக்கப்படும்.

JANANI Jewel House
(91659) Prop: S. VIJEYAKUMAR


## இலவச கண்ணாடி வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம்,ஓக.25

வடமராட்சி லயன்ஸ் கழகத்தினரின் ஏற்பாட்டில் இலவச கண்ணாடி வழங்கும் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டி வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இந்த வைத்தியசாலையில் கண் பரிசோதனைக்கு வந்து கண்ணாடிக்கு சிபார்சு செய்யப்பட்டவர்களும கரவெட்டி நாமகள் சனசமூக நிலையத்திலும் நெல்லியடி மெ.மி.த பாடசாலையிலும் கண் பரிசோதனைக்கு வந்து கண்ணாடி பெற்றுக்கொள்ளாதவர்களுக்குமே இந்த நிகழ்வில் வைத்து கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன. (க-6-109)

### இன்ஸ்பெக்டர் இடமாற்றம்

நெல்லியடி,ஓக.25

காங்கேசன்துறை பொலீஸ் நிலைய இன்ஸ்பெக்டராக, நெல்லியடி பொலீஸ் இன்ஸ்பெக்டர் எச்.ஏ. தகம்பத் கடந்த புதன்கிழமைமுதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது இடத்துக்குக் காங்கேசன்துறை பொலீஸ் நிலைய இன்ஸ்பெக்டர் இகலவெவ குறித்த தினத்திலிருந்து இடமாற்றம் பெற்று பதவியைப் பொறுப்பேற்றுள்ளார்.(ம-109)


லஷ்சுமி இணுவில்
ரஜனி, கமலஹாசன்
நடித்த
அலாவுதீனும் அற்புதவிளக்கும்
(ரீல்ஸ்)
தினசரி:- 10.30, 2.30 (ப.நே)
(91563)

நாகம்ஸ் சுன்னாகம்
இன்றுமுதல் குதூகல ஆரம்பம்
மாதவன், ஜோதிகா
நடித்த
டும் டும் டும்
(ரீல்ஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)
(91501)

ராஜா யாழ்ப்பாணம்
லேடி சுப்பஸ்ரார்
விஜயசாந்தி, சரத்குமார்
நடிப்பில
முதலமைச்சர் ஜெயந்தி
தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)
(C/17875)


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா இராஜேந்திரா

*(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்)*

யாழ்ப்பாணம், நல்லூர் செல்லர் வீதியைச் சேர்ந்த கந்தையா இராஜேந்திரா(ராசா) 21-08-2001 செவ்வாயன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா - இராசம்மா ஆகியோரின் அன்பு மகனும், திரிவேணியின் அன்புக் கணவரும், அபர்ணா, ஸ்ரீஅகிலா (Swiss), கோணேசரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பவளரட்ணம் (Rtd Principal கனடா), மங்கையர்க்கரசி (Rtd Telecom Supervisior), காலஞ்சென்ற வசந்தமல்லிகா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சோமசுந்தரம்(கனடா), மகாதேவன்(கனடா), காலஞ்சென்ற கனகசபாபதி ஆகியோரின் மைத்துனரும், சுந்தரலிங்கம்(கொழும்பு), குணரெட்ணம் (Swiss) ஆகியோரின் மாமனாரும், சுயன், அரவிந்(றோயல் கல்லூரி மாணவர்கள்), ரதீஷன், அக்ஷயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(26-08-2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பொறளை ஜெயரட்ணபுர மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.6 ஹில்டன் பிளேஸ்,*
*கொழும்பு - 4.*
*தொ.இலக்கம்:- 585457.* (91525)

தகவல்:-
தி.மு.சுந்தரலிங்கம்
*(மருமகன்)*

### சபாபதி குமரையா

கோகிலாகண்டி மத்தி, கைதடியைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி குமரையா நேற்று (24.08.2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும் கனகசிங்கம் (பொறியியலாளர், லண்டன்), கமலாம்பாள், நாகேஸ்வரி, உதயகுமார் (ஜேர்மனி), சாந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்தியேஸ்வரி (லண்டன்), மகேந்திரராஜா (லிகிதர், ப.நோ.கூ.சங்கம் - கைதடி) கணேஸ்வரன் (சுவிஸ்), நவஜோதி (ஜேர்மனி), மகேந்திரம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் துஸித்தா, சங்கீதா, டயானா, கேசவன், சாமினி, தர்சிகா, வக்ஸி, நிசுதர்மன், நயாளினி, தர்சனா, தர்சன், சைமினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 24.08.2001 பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*5/1, பிரப்பங்குளம் வீதி,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*

தகவல்:-
ந.சிறிகாந்த் *(பேரன்)* (91570)

### திருமதி மகேஸ்வரி பொன்னுத்துரை

*(கமலா கராஜ் & இண்டஸ்றீஸ் உரிமையாளரின் மனைவி)*

இல.80, யாழ்.வீதியைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி பொன்னுத்துரை அவர்கள் நேற்று (24.08.2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் ஐயங்கர் பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் இரஜீந்திரன (முகாமையாளர், கமலா கராஜ் & இண்டஸ்றீஸ்), ரஜிவதன்(ஜேர்மனி), சாந்தி(பிரான்ஸ்), ரஜிகரன்(ஜேர்மனி), ஜெயந்தி(ஜேர்மனி), வசந்தி (ஆசிரியை, கரம்பன் சிறிய புஷ்பம் மகளிர் வித்தியாலயம், சென்.மேரிஸ் மகளிர் வித்தியாலயம் - ஊர்காவற்றுறை), துஷ்யந்தி(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், இராசையா, மங்கையர்க்கரசி மற்றும் இராசேந்திரம்(உரிமையாளர், சுசி இண்டஸ்றீஸ்), கமலநாயகி(திருகோணமலை), அருணகிரிநாதன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மல்லிகா, வதனா(ஜேர்மனி), தனபாலசிங்கம் (பிரான்ஸ்), ஜெயந்தினி (ஜேர்மனி), இரட்ணமோகன் (ஜேர்மனி), எட்வேர்ட் றெஜினோல்ட் (யாழ்.பல்கலைக்கழகம்), ரவீந்திரதாஸ் (றோஜன்-கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் இன்று (25.08.2001) சனிக்கிழமை காலை 11 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 80, யாழ்.வீதி,*
*யாழ்ப்பாணம்.* (91574)

தகவல்:-
பொ.இரஜீந்திரன் (மகன்)

### திருமதி றோசம்மா செல்வரட்ணம் (பொன்னர்)

வளன்புரத்தைச் சேர்ந்த றோசம்மா செல்வரட்ணம் நேற்று (24.08.2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பண்டிதர் செல்வரட்ணம் (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் சறோஜினி(கண்டி), ரவீந்திரன்(U.K), ஜெறோம் புவனேந்திரன்(வஸ்தியன் குளிர்சோலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் பற்றிக் மரியாம்பிள்ளை (கணக்காளர், நீர்ப்பாசனத் திணைக்களம்-கண்டி), சந்திரிகா(U.K), சியாமளா ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி சியாமளா ஞானராஜ், திருமதி நிலானி நேசராசா, மைதிலி(இந்தியா), பிரதீபா, யஸ்மின்(U.K), ஜெரீன், நிரோஜன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை(26.08.2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து யாழ்மரியன்னை சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*364, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.* (91576)

தகவல்:-
ஜெறோம் புவனேந்திரன் (மகன்)

### செல்லத்துரை மரியம்மா

அளவெட்டி தெற்கு, கலைநகரைச் சேர்ந்த செல்லத்துரை மரியம்மா நேற்று (24-08-2001) வெள்ளிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் வீரசிங்கம் (கனடா), தங்கபூபதி (வவுனியா), காலஞ்சென்ற சந்திராதேவி, செல்லத்தம்பி, தமேஸ்வரி, யோகேஸ்வரி (வவுனியா), இராஜேஸ்வரி, பத்மநாதன் (யாழ் போதனா வைத்தியசாலை), விக்கினேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராசமணி (கனடா), கோபாலசிங்கம் (சுவிஸ்), சூரியகுமார், கந்தசாமி (வவுனியா), தவத்துரை, அருச்சுனன், சுகந்தி (மருத்துவமனை, மந்திகை) ஆகியோரின் அன்பு மாமியாரும் கனடாவில் வசிக்கும் லெனின்ராஜ், யாமினி, தீபராஜ், ஜயாளினி, தேவமனோகரி (சுவிஸ்), தேவமனோகரன், தேவரஞ்சி, சுபாஷனா, சிவசுதன்(லண்டன்), சிவகுலன் (லண்டன்), லோசனா, தீபனா, சுலக்ஷன், நிலக்ஷன், சுலச்சிகா, அஜந்தன், சியாந்தினி, டினேஸ், சஸ்சிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2001) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அளவெட்டி தெற்கு,*
*கலைநகர்,*
*அளவெட்டி.* (91575)

தகவல்:-
சே. செல்லத்தம்பி
சே.பத்மநாதன்
(மகன்மார்)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



அன்புடையீர்!

விஷு வருடம் ஆடி மாதம் 12ஆம் நாள் (28.07.2001) சனிக்கிழமை

சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

### அமரர் கயிலாயக்கம்பர் கணேசன்

அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (26. 08. 2001) ஞாயிற்றுக்கிழமை காலை 8. 00 மணிக்கு ஆயங்கன்று வைரவர் கோயிலடி புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். வீட்டுக்கிருத்தியம் 27. 08. 2001 திங்கட்கிழமை காலை 9. 00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*மருதடி,*
*காரைநகர்.* (C/17996) மனைவி, மக்கள் .

கட்டுநாயக்கா தாக்குதலை அடுத்து

# தளபதியின் ராஜினாமாவை ஏற்க மறுத்த ஜனாதிபதி

கொழும்பு,ஓக.25

கடந்த மாதம் 24ஆம் திகதி கட்டுநாயக்கா விமானப் படைத் தளத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னர் அதற்கான பொறுப்பை ஏற்று கடந்த மாதம் 25 ஆம் திகதி விமானப்படைத் தளபதி ஜயலத் வீரக்கொடியால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட ராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி ஏற்க மறுத்துள்ளார் எனத் தெரியவருகிறது.

கட்டுநாயக்கா தாக்குதல் சம்பவம் மற்றும் அது தொடர்பாகத் தான் கொண்டுள்ள கருத்துக்களை வெளியிடுவதற்கு பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை கூட்டுவதற்கு விமானப் படைத் தளபதி மேற்கொண்ட முயற்சிகளும் ஜனாதிபதியால் தடுக்கப்பட்டுள்ளன.

மேலும் கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீதான தாக்குதல் தொடர்பான எதுவித கருத்துக்களையும் வெளியிட வேண்டாம் என்று விமானப் படைத்தளபதி ஜனாதிபதியால் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

இவ்வாறு 'ராவய' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

(க)

## ஸ்திரமான அரசு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதில் அர்த்தம் ஏதுமில்லை.

அத்தோடு -

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு முன்வந்த நோர்வேயிலும் கூட, இப்போது தேர்தல் காலம். எனவே அங்குள்ள அரசு கூடத் தேர்தலின் பின்னர் தொடருமா என்ற ஐயுறவு நிலை உள்ளது. அடுத்த மாதம் தேர்தல் முடிந்த பின்னர் தான் அங்கும் ஸ்திரமான ஒரு நிலை ஏற்படும்.

எனவே இப்போதைக்கு நோர்வே மத்தியஸ்தம் கிடப்பில் போட்ட நிலையில் கிடப்பது தொடரும்.

கொழும்பிலும் ஒஸ்லோவிலும் அரசியல் ஸ்திரநிலை ஏற்பட்ட பின்னர் பேச்சுக்கான வாய்ப்பு உள்ளதா என்பது குறித்துக் கவனிக்கலாம் - என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## குருநகரில் நாளை இசைகானம்

யாழ்ப்பாணம்,ஓக.25

இந்தியாவில் இருந்து இங்கு வருகை தந்துள்ள இறையியல் பேராசிரியர் அருள்திரு மத்தியூ கருணாகரன் வழங்கும் இசைகானம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலய முன்றில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வை யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

(க-6-10)

## அரச தரப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் கோரிக்கையை பிரதமர் ஏற்றுக்கொண்டுள்ளார் என்றும் -

அதன்பின்னர் பேச்சுக்களில் பங்குபற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் - ஐ.தே.கட்சி வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சில் அரசு சார்பில் அமைச்சர்களான மஹிந்த ராஜபக்ஷ, டி.எம்.ஜயரத்ன, நிமால் ஸ்ரீபாலடி சில்வா, அனுருத்த ரத்வத்த, மங்கள சமரவீர, லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரும் -

ஐ.தே.கட்சி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கரு ஜெயசூரிய, டிரோன் பெர்னாண்டோ, கே.என்.சொக்ஸி மற்றும் கட்சியின் தவிசாளரான சரித்த ரத்வத்த ஆகியோரும் - பங்குபற்றுவர்.

நாடாளுமன்றத்தை உடன் கூட்டுதல், சர்வஜன வாக்கெடுப்பை ரத்துச் செய்தல், முக்கிய விடயங்களைக் கையாள்வதற்கு ஐந்து சுதந்திர ஆணைக்குழுக்களை அமைத்தல் ஆகியன தொடர்பாக ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ள மூன்று நிபந்தனைகள் குறித்தும் இந்தப் பேச்சில் ஆராயப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(க-3-4)

## ஜனார்த்தனம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சமயம் அங்கு வந்த பொலீஸார் அவரையும் உடனிருந்தவரையும் கைது செய்ததாகவும் - கூறப்பட்டது.

விசாரணையின் பின்னர் இருவரும் விடுவிக்கப்பட்டனர். (க-3)

*(முன்னர் வந்த செய்தி 6ஆம் பக்கத்தில்)*

## 'தகுதிகாண்' அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.வி.பியின் முக்கிய நிபந்தனைகள் குறித்து ஜனாதிபதி தமது கடிதத்தில் எதுவும் குறிப்பிடவில்லை என்று கூறப்படுகிறது.

இதேநேரம் -

ஜனாதிபதியின் கடிதத்தின் உள்ளடக்கத்துக்கு முழுமையாக, மாறான உள்ளடக்கத்துடனான கடிதம் ஒன்றைப் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா, ஜே.வி.பிக்கு அனுப்பி வைத்திருப்பதாக அதே செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது.

"பல்வேறு முக்கிய விடயங்களில் ஜே.வி.பியுடன் மிக விசாலமான இணக்கம் காணப்பட்டுள்ள போதிலும், இன்னும் சில விடயங்கள் குறித்துப் பேசித் தீர்க்கவேண்டியுள்ளது.

*நிறைவேற்று அதிகார ஜனாதிபதி* ஆட்சி முறையை உடனடியாக ஒழித்தல், எதிர்வரும் 7ஆம் திகதி நாடாளுமன்றைக் கூட்டுதல் (அதாவது தொடர்ந்து நாடாளுமன்றத்தை ஒத்தி வைப்பதில்லை), அரச வங்கிகள் மற்றும் காப்புறுதிக் கம்பனிகளைத் தனியார் மயப்படுத்தாதிருத்தல், நாட்டின் நீர்வளத்தை முற்றாக அரசின் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் போன்ற ஜே.வி.பியின் கோரிக்கைகள் முழு அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

"எனினும் அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை இருபதுக்குக் குறைத்தல், ஐந்து முக்கிய விடயங்களைக் கையாள சுதந்திர ஆணைக்குழுக்களை நியமித்தல், தேர்தல் காலத்தில் காபந்து அரசு அமைத்தல் போன்ற விடயங்கள் குறித்து இன்னும் பேசித் தீர்மானிக்க வேண்டி உள்ளது" - என்று பிரதமர் தனது கடிதத்தில் குறிப்பிட்டதாக அறியவந்தது.

எனினும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தேசிய நல்லிணக்க அரசு நிறுவது தொடர்பாக ஆராய்வதற்கு வருமாறு அழைப்பு விடுத்துத் தாம் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்த முக்கிய விடயங்களான - இனப்பிரச்சினை விவகாரம், புலிகளுடன் பேச்சு நடத்துதல் - போன்றவை குறித்து ஜே.வி.பிக்கு அனுப்பிய கடிதத்தில் பிரதமர் ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் கூறப்பட்டது.

(உ-3-4)


கராட்டிக்கலையின் மிகநுட்பமான
தற்பாதுகாப்பு தடுப்பு முறைகள் அடங்கிய
கராட்டிக் கண்காட்சி

A.O.M.A. கழகத்தினரின் வளர்ச்சி நிதிக்கான நிகழ்ச்சி.
காலம்:- இன்று 25.08.2001 மாலை 4 மணி.
இடம்:- திக்க முனை மைதானம், பருத்தித்துறை.
- A.O.M.A. கழகம்.
(C/17997)

குறிஞ்சி ரேடேர்ஸ்
சாவகச்சேரி
தற்போது புதிய வடிவமைப்பில் உருவமைக்கப்பட்ட பின்வரும் பஜாஜ் மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு வந்துள்ளன.
கலிபர் (Caliber)
பொக்சர் (BOXER)
எம்.80 (Four stroke, Four gears)
தொடர்பு - ஜெயம் மோட்டோர்ஸ்
கொடிகாமம் வீதி,
நெல்லியடி.
(குளோபல் தொலைத்தொடர்பு சேவை நிலையத்துக்கு அருகில்)
(91526)

உ
அராலி கரைப்பிட்டி கணபதீஸ்வரன்
திருக்கோயில்
மணவாளக் கோலவிழா
காலம் : நாளை (26-08-2001) ஞாயிற்றுக்கிழமை
(ஆவணித் திங்கள் 10ஆம் நாள்)
காலை 7 மணி முதல் 1008 சங்காபிஷேகம்
மாலை 4 மணி முதல் தண்டிகை உற்சவம்
நாதாஞ்சலி :
நாதகலாமணி R.சிவகுமார் குழுவினர்,
நாதஸ்வர கலாநிதி N.K.பத்மநாதன் குழுவினர்.
- மேற்படி தேவஸ்தானம்.
கணபதீஸ்வரர் திருவடிகளை பணிந்து வணங்குவோம்.
பாலன் மில்ஸ்
மாவடி, (91352) - வட்டுக்கோட்டை.

விண்ணப்பித்து விட்டீர்களா ?
IBMS இன் புலமைப்பரிசில் திட்டம் 2001/2002
மாணவர்களே !
தகவல் தொழில்நுட்ப உலகுடன் நீங்களும் இணைந்து கொள்ள இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்.
இவ் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.
பின்வரும் மாதிரி விண்ணப்பப்படிவத்தை தயாரித்து Director, IBMS, No 701, K.K.S Road, Jaffna எனும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.
மாதிரி விண்ணப்பப் படிவம்
Full Name : ______
Address (Perm & Tem) : ______
N.I.C/ Spe.I.C No : ______
Sex : ______ Date of Birth : ______
Course : ______
Signature : ______ Date : ______
இது பற்றிய மேலதிக விபரங்கள் விரைவில்
Head Office : IBMS,
[Affiliated to Barrington University of USA]
No.701, K.K.S Road, Jaffna.
Phone: 021-3165 Email: ibmsjaf@yahoo.com
Branches: Nelliyady. Chankanai.

உழவு இயந்திரம் விற்பனைக்கு
நல்ல பாவிப்பு நிலையில்
உள்ள உழவு இயந்திரம்
(மசிபேர்க்குசன்) 36 Sri 8910
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
த.சிதம்பரப்பிள்ளை (ஆசிரியர்),
கே/பட தம்பி தொலைத்தொடர்பு நிலையம்,
அல்வாய் கிழக்கு,
அல்வாய். (91545)

மீண்டும்
புவியியல் வகுப்புக்கள்
ஆரம்பம் (2002 Paper Class)
சனி, ஞாயிறு பி.ப. 12.30 - 1.30
By:- S.ஐங்கரன்
B.A. (Hons) Geo. Spl.
விக்னா கல்வி நிறுவனம்
(C/17992) யாழ்ப்பாணம்.

தேவை
நிர்வாக உதவியாளர் எழுதுவினைஞர் (ஆண், பெண் இருபாலாரும்) தேவை. எதிர்வரும் (27.08.2001) திங்கட்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நேரில் வரவும்.
BITSMANS கல்வி நிறுவனம், மானிப்பாய். (91520)

BEACON
அளவையியல் மாணவர்களுக்கு
S.S.மனோகரனின்
வகுப்புகள் யாவும் வழமைபோல் இன்று (25.08.2001) சனிக்கிழமை தொடக்கம் நடைபெறும்.
(91556)

தேவை
ஐஸ்பழம் கொண்டு
திரிந்து விற்பதற்கு
சைக்கிள் வியாபாரிகள்
தேவை.
தொடர்பு: இல.14, அடியபாதம் வீதி,
திருநெல்வேலி
(கல்வியங்காட்டுச் சந்திக்கு அண்மையில்)
(91497)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி விமலலோஜினி தர்மகுலசிங்கம்

*(ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி)*

எச்சாட்டி வைரவர் கோயிலடி, சுதுமலை தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த திருமதி விமலலோஜினி தர்மகுலசிங்கம் 24.08.2001 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணர் இராசதுரை - மருதாச்சிப்பிள்ளை இராசதுரை தம்பதியினரின் பாசமிகு மகளும் இராசு தர்மகுலசிங்கத்தின் அன்பு மனைவியும் இராசு - அன்னம் தம்பதிகளின் அன்பு மருமகளும் புஸ்பராணி (மானிப்பாய் ப.நெ.வள அ.கூ. சங்கம்), சரோஜினிதேவி, புஸ்பமலர்(ஆசிரியை, மானி. சென்.ஆன்ஸ் பாடசாலை), நந்தினிதேவி (ஆசிரியை, மானி. இந்துக் கல்லூரி), விமலாம்பிகை (பிரான்ஸ்), ஜெயமுகானந்தன் (கூட்டுறவுப் பரிசோதகர், கூ.அ. திணைக்களம், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற ஜயசிவானந்தன் (மாணவன், சித்த மருத்துறை - யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற வரதராசன், ஜெயராசா (விநாயகர் மரக்காலை, மானிப்பாய்), பேரின்பநாயகம் (சங்கானை அரசினர் வைத்திய சாலை), தியாகராசா, சந்திரகாசன் (பிரான்ஸ்), மன்மதராசா, சுசீலா, புஸ்பராணி, புஸ்பலீலா, லிலலேஸ்வரி, நித்தியானந்தன், இராசேஸ்வரி, உகந்தராசா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.08.2001) ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூத உடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
இராசதுரை ஜெயமுகானந்தன்
(சகோதரன் - கூட்டுறவுப் பரிசோதகர்)

*எச்சாட்டி,*
*சுதுமலை தெற்கு,*
*மானிப்பாய்.*

(91577)

## நாகலிங்கம் சண்முகம்

கல்லைவேம்படி, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட நாகலிங்கம் சண்முகம் (ஐயர் அப்பா) நேற்று (24.08.2001) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னு, வள்ளிஅம்மை ஆகியோரின் கணவரும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை, நாகலிங்கம், கிருஸ்ணமூர்த்தி, தில்லையம்பலம், ராஜேஸ்வரி, செல்வேஸ்வரி, தங்கேஸ்வரி ஆகியோரின் தந்தையாரும் நாகேஸ்வரி, மகேஸ்வரி, பவானி, புஸ்பராணி, காலஞ்சென்ற வேலாயுதம், ஆறுமுகம், இராமநாதன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஊமைக்கேணி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.நாகலிங்கம்
(மகன்)

*கல்லை வேம்படி,*
*சுழிபுரம்.*

(C/17994)

## கந்தையா சிவபாக்கியம்

35/6, குமாரசாமி வீதியைச் சேர்ந்த கந்தையா சிவபாக்கியம் நேற்று (24.08.2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையாவின் அன்பு மனைவியும், ஜோகேஸ்வரன் (கொக்குவில் கிராம உத்தியோகத்தர்), இந்திரேஸ்வரன் (டென் மார்க்), அம்பிகாவதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் வேலாயுத பிள்ளை (மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர்), இராசமலர், கலாவதி ஆகியோரின் அன்பு மாமியாரும் மதுரா, மதுமியா, மயூரா, இந்துமதி, சிவகோகிலா, கிறிஸ்தீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2001) சனிக் கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.யோகேஸ்வரன்
(கிராம உத்தியோகத்தர்)
மகன்

*35/6, குமாரசாமி வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*

(C-18000)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில 25.08.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.